உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௩.] தாது௵ ஆடி௴ [பகுதி-௯.
Vol. XXXIII. July—August 1936. No. 9.

உள்ளுறை.

நியாயப்பிரவேசமணிமேகலை:—பத்திராசிரியர். ௨௨௧—௨௩௨

கம்பராமாயண இன்கவித்திரட்டு:- } ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார் ௨௩௩—௨௪0

ரமாமணி:—ஸ்ரீமத். V. S. ராமஸ்வாமி சாஸ்திரியார் B.A. B.L. ௨௪௧—௨௫0

மதிப்புரை:— ௨௫௧—௨௫௨

சிராமலைக்கோவை:- (குறிப்புரையுடன்) } ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி - டாக்டர் உ. வே. சாமிநாதையர். 97—104

சூடிக்கொடுத்தநாய்ச்சியார் தோத்திரப்பாமாலை மூலமும் உரையும்:— } ஸ்ரீமத். ரெ. அப்புவையங்கார். 49-56

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவுகணக்கு:—

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1936.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, New Jail Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
*7.	தோத்திரத்திரட்டு			
*8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம்.	6	0	0
*	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
*9.	அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

உ
கடவுள் துணை.
செந்தமிழ்.

தொகுதி-௩௩.] தாதுஹூ ஆடிமீ [பகுதி-௯.
Vol. XXXIII. July—August 1936. No. 9.

நியாயப்பிரவேச மணிமேகலை.

[உ௦அ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

II. வைதன்மிய திருட்டாந்தப்போலி.

கீழ் சாதந சாத்திய தன்மங்களுடன் கூடியிருப்பதான சாதன்மியதிருஷ்டாந்தங்கள் போலியாதற்குரிய குற்றங்கள் ஆராயப்பட்டன. மேல் சாத்திய சாதந தன்மங்களின் இன்மையுடன் கூடியிருக்கக்கடவதான வைதன்மியதிட்டாந்தம் போலியாதற்குரிய குற்றங்கள் ஆராயப்படும்.

நியாயப்பிரவேசத்தில், வைதன்மியதிருஷ்டாந்தப்போலிநிருபணம் செய்யத்தொடங்கி முதலில், அதன் வகை இனையவென்பதும், அவற்றின் பெயர்கள் இவையென்பதும் கூறப்படும்.

அவை வருமாறு:—

வைவஸெ்ம்ணாவி உ்ரஷா்ஹாஸஃ வஂசவூகாரஃ।
தஷ்யா ? ஸாஜ்யாவ்யாவ்ருத்தஃ, ஸாய நாவ்யாவ்ருத்தஃ,
உஹயாவ்யாவ்ருத்தஃ, அவ்யதிரெகஃ, விவரீதவ்யதிரெகஸ்ஜெதி ॥

என்பது.

இதன்பொருள்: வைதர்மியமாகவும் திருஷ்டாந்தாபாசம் ஐந்துவகைப்படும். அஃதெங்ஙன மெனில்? சாத்தியாவியாவிருத்தம், சாதநாவியாவிருத்தம், உபயாவியாவிருத்தம், அவ்வியதிரேகம், விபரீதவியதிரேகம் என்பனவாம்.

இவற்றுள், முதல் நின்ற மூன்றும் மணிமேகலையுள், சாத்தியா வியாவிருத்தி, சாதநாவியாவிருத்தி, உபயாவியாவிருத்தி எனத் தர்ம வாசகம்கொண்டு இலக்கணையால் வழங்கப்பட்டிருப்பதும் ஒரு வேறுபாடு. அவற்றை, மணிமேகலையாசிரியர் நியாயப்பிரவேசத்தி லுள்ளபடியே சாத்தியாவியாவிருத்தம், சாதநாவியாவிருத்தம், உபயாவியாவிருத்தம் என அபிதாவிருத்தியால் வழங்காத காரணம் ஆராயத்தக்கது.

நியாயப்பிரவேசத்தில் ஈண்டுக்கூறிய வைதன்மிய திருஷ்டாந்தப்போலியின் வகையும் பெயரும், மணிமேகலையுள் சாதன்மிய திருஷ்டாந்தப்போலியின் வகையும் பெயரும் கூறுமிடத்தில் முன்னரேகூறப்பட்டன. ஆதலால் இனி இரண்டுநூல்களிலும் வைதன்மிய திருஷ்டாந்தப்போலிநிரூபணமே தொடங்கிச் செய்யப் படும்.

1. சாத்தியாவியாவிருத்தம்.

நியாயப்பிரவேசத்தில் நிறுத்தமுறையே முதலில், 'சாத்தியா வியாவிருத்தம்' என்னும் திருஷ்டாந்தப்போலிநிரூபணம் வருமாறு:-

தத்ர ஸாத்யாவ்யாவ்ருத்தோ யதா? நித்ய: ஶப்தோ(அ)மூர்த்தத்வாத்
பரமாணுவத்। யதநித்யம் தந்மூர்த்தம் த்ருஷ்டம் யதா பரமாணு:।
பரமாணோர் ஹி ஸாதநதர்மோ(அ)மூர்த்தத்வம் வ்யாவ்ருத்தம்;
மூர்த்தத்வாத் பரமாணூநாமிதி। ஸாத்யதர்மோ நித்யத்வம்
ந வ்யாவ்ருத்தம்; நித்யத்வாத் பரமாணூநாமிதி॥ என்பது.

இதன் பொருள்: வைதர்மிய திருஷ்டாந்தாபாசத்துள் 'சாத்தியாவியாவிருத்தம்' என்னும் திருஷ்டாந்தப்போலி எங்ஙன மெனில்? 'சத்தம் நித்தியப்பொருள்; அமூர்த்தப்பொருளாதலால், (பரமாணுப்போலும்), யாதொன்று அநித்தியப்பொருளோ? அது, மூர்த்தமாகக் காணப்பட்டது; பரமாணு எப்படியோ (அப்படியே)' பரமாணுவுக்கு சாதநதர்மமான அமூர்த்தத்தன்மை வேறு பட்டது; பரமாணுக்களுக்கு மூர்த்தத்தன்மையுண்மையால். பரமாணுக்களுக்கு சாத்தியதன்மமான நித்தியத்தன்மை வேறு பட்டதில்லை; பரமாணுக்கள் நித்தியப்பொருளாதலால் என்பது.

இதனுள்ளும் 'பரமாணுவத்' (பரமாணுப்போலும்) என்றது வேண்டாது கூறுதலாயிற்று. 'யதாபரமாணுः' (பரமாணு எப்படியோ அப்படியே) என்றிருப்பது 'பரமாணுப்போலும்' என்னும் திருஷ்டாந்தவாசகபரியாயமாயிற்று; மேலுள்ளன விளக்கவுரை.

மணிமேகலையில் இது சாத்தியாவியாவிருத்தி என வழங்கப் படும்; அது வருமாறு:—

"………வை தன்மிய திருட்டாந் தத்துச்
சாத்தி யாவி யாவி ருத்தி
யாவது சாதந தன்ம மீண்டு
சாத்திய தன்ம மீளா தொழிதல்
சத்த நித்த மமூர்த்தத் தென்றால்
யாதொன் றியாதொன்று நித்தமு மன்றது
வமூர்த்தமு மன்று பரமாணுப் போலெனி
னப்படித் திட்டாந்த மாகக் காட்டப்
பட்டபர மாணு நித்தமாய் மூர்த்த
மாதலிற் சாதந வமூர்த்த மீண்டு
சாத்திய நித்த மீளா தொழிதல்" (௪0௩—௪௧௩)

என்பது.

இதனுள், 'வைதன்மியதிட்டாந்தத்து' என்றது முன்பு சாதன்மியதிருஷ்டாந்தப்போலிவகையின்பெயர்களையடுத்துச்சொல்லப்பட்ட வைதன்மிய திருஷ்டாந்தப்போலிவகையுள் என்றவாறு.

வைதன்மியதிருஷ்டாந்தமாவது சாதன்மியதிருஷ்டாந்தத்தின் மறுதலையான, சாத்திய சாதந தர்மங்களிரண்டுமில்லாத திருஷ்டாந்தம்; (அதாவது வெதிரேகவியாத்தியால் சாத்தியாபாவத்தைக்கொண்டு சாதநாபாவத்தைக் கருதுதற்குரிய திருஷ்டாந்தம்; இது குற்றமற்றதே. இது பிழைபடுமிடத்தில் திருஷ்டாந்தப்போலியாமென் றறியத்தக்கது. 'திட்டாந்தத்து' எனச் சாரியை நிற்க ஏழனுருபு தொக்கது. வைதன்மியதிட்டாந்தப்போலிவகையுள் என்பார் வைதன்மியதிட்டாந்தத்து என்றார்.

'சாத்தியாவியாவிருத்தி' என்றது, 'சாத்தியாவியாவிருத்தியென்னும் பெயருடைய வைதன்மியதிருஷ்டாந்தப்போலியின்

இலக்கணம்' என்றவாறு. சாத்தியாவியாவிருத்தி - சாத்தியப் பொருளால் (சாதன்மியதிருஷ்டாந்தத்தோடு) வேறுபாடின்மை.

'சாத்தியாவியாவிருத்தி' என்னும் இலக்கியத்தின்பெயர் அதன் இலக்கணத்துக்கு ஆனமையால் ஆகுபெயராயிற்று.

'ஆவது' என்றது எழுவாய்ப்பொருள்பற்றிநிற்பதொரு சொல் லுருபு.

'சாதநதன்மம் மீண்டு சாத்தியதன்மம் மீளாதொழிதல்' என்றது, வாதியாற் காட்டப்பட்ட திருஷ்டாந்தப்பொருளில் 'சாதநதன்மம் இல்லதாகவும், சாத்தியதன்மம் உள்ளதாகவும் இருத்தல்' என்றவாறு. (இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.)

வாதியாற் காட்டப்பட்ட திருஷ்டாந்தத்தில் என்பது இசை யெச்சம்.

சாதநதன்மம்—ஏதுப்பொருள். மீளல், மறித்தல், திரும்புதல், மடங்கல் என்பன எதிர்நிலையடைதல் என்னும் ஒருபொருட் சொற்கள்.

சாதன்மியதிருஷ்டாந்தத்துக்குச் சாதநதன்மமுள்ளவிடத்தில் சாத்தியதன்மமுள்ளதாகக் காட்டுதல் அந்நுவயமாதலால், அதன் மறுதலையான வைதன்மியதிருஷ்டாந்தத்துக்கு அவ்வந்நுவயம் வெதிரேகமாய் மாறிநிற்குமாதலால் அது சாத்தியதன்மத்தின் இன்மையுள்ளவிடத்தில் சாதநதன்மத்தின் இன்மையும் உள்ள தாகக்காட்டுதலாம். ஆகவே சாதநதன்மம் மீண்டு என்றது சாதந தன்மம் இல்லையாக என்றவாறாயிற்று. மீள என்பது மீண்டு எனத் திரிந்து பிற வினைமுதல்வினைகொண்டது; அல்லது, சாதநசாத்தி யங்களுக்குக் காரணகாரியசம்பந்தமுடைமையால் ஒற்றுமைநயம் பற்றி, 'சாதநதன்மம் மீண்டு சாத்தியதன்மம் மீளாதொழிதல்' என்றார் எனினுமாம்.

மீளல் மாறிநிற்றலாதலால் மீளாமை மாறிநில்லாமையாயிற்று; ஆகவே, சாத்தியதன்மம் மீளாதொழில்-சாத்தியதன்மம் உள்ளதா யிருத்தல் எனக்கொள்க.

சாதநதன்மம் மீளல் வைதன்மியதிட்டாந்தத்துக்குக் குற்றமாகாதாயினும், அது மீளாதொழியும் சாத்தியதன்மத்துடன் கூடியிருப்பது குற்றமாயிற்று.

சாத்தியதன்மமீளுதல் வைதன்மியதிருஷ்டாந்தத்துக்குக் குணமாயுள்ளதாதலால் அது மீளாதொழிதல் (உளதாதல்) குற்றமாயிற்று.

இனி, இத்திருஷ்டாந்தப்போலிக்கு உறுப்பாயுள்ள பக்ஷ சாத்திய சாதநதன்மவசனம் கூறி, உதாரணங்காட்டி விளக்குதற்கு முதலிற் சாதநவாக்கியங் கூறப்படுகிறது 'சத்தம் நித்தம் அமூர்த்தத்து' என்று.

இதனுள் சத்தம் பக்கப்பொருள்; நித்தமாதல் சாத்தியதன்மம்; அது சத்தத்தின்கணுள்ளது; அதனையுடைய சத்தம் ஒற்றுமைநயம்பற்றி நித்தமெனப்பட்டது. அமூர்த்தமாதல் சாதநதன்மம்; அது அமூர்த்தப்பொருளிலுள்ளது. அதுவும் ஒற்றுமைநயம்பற்றி அமூர்த்தமெனப்பட்டது.

'அமூர்த்தத்து' என அத்துச்சாரியைநிற்ப ஆனுருபு விகாரத்தாற் றொக்கது; அதனை விரிக்க அமூர்த்தத்தால் என்பதாம்; ஆகவே அமூர்த்தமாதலால் என்பது கருத்தாகக் கொள்க.

'என்றால்' என்றது என்றகால் என்பதன் பரியாயத்திரிபாய் என்னுமிடத்தில் என்னும் விடயப்பொருள்பட நின்றது.

'யாதொன்று யாதொன்று நித்தமுமன்று அது அமூர்த்தமுமன்று; பரமாணுப்போல்' என்றது உதாரணம். இதனுள் 'யாதொன்று யாதொன்று நித்தமுமன்று அது அமூர்த்தமுமன்று' என்றது வெதிரேக வியாத்திவாசகம். இதற்கு அந்நுவய வியாத்திவாசகம், 'யாது யாது அமூர்த்தமோ அது அது நித்தம்' எனச் சாதநதன்மவாசகம் முன்னும் சாத்தியதன்மவாசகம் பின்னுமாக நிற்றலால், அது வைதன்மியதிருஷ்டாந்தத்துக்குரிய வெதிரேகவியாத்திவாசகமாக மீளும் (திரும்பும்) பொழுது சாத்தியதன்மமின்மை முன்னும் சாதநதன்மமின்மை பின்னுமாகச் சொல்லப்பட்டு மாறிநிற்பது காண்க.

இதனால் நித்தமல்லாதனவெல்லாம் அமூர்த்தமாம் என்னும் வெதிரேகவியாத்தியுணர்வைத் தோற்றுவித்தவாறாயிற்று.

யாதொன்று யாதொன்று என்னும் வினாவடுக்கால் அது என்பது அது அது என்னும் சுட்டடுக்காய் எஞ்சாமைப்பொருளுணரநின்றது.

'பரமாணுப்போல்' என்றது திருஷ்டாந்தவாசகம். இதனாற் சொல்லப்பட்ட பரமாணு திருஷ்டாந்தப்பொருள்.

'எனின்' என்றது இத்திருஷ்டாந்தம் குற்றமுடையதென்று விளக்கிக்காட்டுதற்கு வாதிகூற்றை அநுவதித்துக்கொண்டமை தோன்ற நின்றது.

அதன் விளக்கவுரை வருமாறு:—

'அப்படித் திட்டாந்த மாகக் காட்டப்
பட்ட பரமாணு நித்தமாய் மூர்த்த
மாதலிற் சாதந வமூர்த்தம் மீண்டு
சாத்திய நித்தம் மீளா தொழிதல்'

என்பது.

இதனுள் 'அப்படித் திட்டாந்தமாகக்காட்டப்பட்ட பரமாணு' என்றது சத்தத்தைப் பக்கப்பொருளாகக்கொண்டு அது நித்தப்பொருளெனச் சாதிக்கவேண்டி அச் சத்தம் அமூர்த்தப்பொருளாதலால் என்று சாதநதன்மவசனம் கூறி, அச்சாதநதன்மத்துக்குச் சாத்தியதன்மத்தோடு வெதிரேகவியாத்திகாட்டவேண்டி 'யாதொன்றியாதொன்று நித்தமுமன்று அது அது அமூர்த்தமுமன்று' என்று வெதிரேகவியாத்திவசனங்கூறி, 'பரமாணுப்போலும்' என்று திருஷ்டாந்தவசனத்தால் உதாரணமாகக் காட்டப்பட்ட பரமாணு என்றவாறு.

'நித்தமாய் மூர்த்தமாதலின்' என்றது இவ்வுதாரணம் திருஷ்டாந்தப்போலியாதற்குக் காரணம் காட்டியவாறு. நித்தம் - வடமொழிச்சிதைவு. அழிவில்லாதது என்பது பொருள். மூர்த்தம் வடிவுடைப்பொருள். பரமாணு நித்தமாயும், மூர்த்தமாயும் உள்ளதென்பது நியாயநூன்முடிபு.

'சாதநவமூர்த்தமீண்டு' என்றது சாதநதன்மமான அமூர்த்தத்தன்மை சாதன்மியதிருஷ்டாந்தத்தில் உள்ளதாயிருப்பது போலன்றி, இவ் வைதன்மியதிருஷ்டாந்தத்தில், (பாமாணுவில்) இல்லதாகவே யியலவேண்டுமாதலால் அவ்வாறே இல்லதாகின்றே என்றவாறு. 'அமூர்த்தம்' என்றது அமூர்த்தத்தன்மையை. சாதந அமூர்த்தம் மீளல் இவ் வைதன்மியதிருஷ்டாந்தத்துக்குக் குற்றமில்லையாயினும், அது மீளாதொழியும் சாத்தியதன்மத்துடன் கூடியிருப்பது குற்றமாயிற்று.

'சாத்தியநித்தம் மீளாதொழிதல்' என்றது சத்தத்தின்கண் சாதிக்கத்தொடங்கிய சாத்தியதன்மமான நித்தத்தன்மை சாதன்மியதிருஷ்டாந்தத்தில் உள்ளதாயிருப்பதுபோலன்றி இவ் வைதன்மியதிருட்டாந்தத்தில் (பாமாணுவில்) இல்லதாகவே நிகழவேண்டுமாதலால், அவ்வாறியலாது உள்ளதாகவே காணப்படுதலால், அங்ஙனம் உள்ளதாதல் மீளாதொழிதலென்னும் குற்றமாயிற்று என்றவாறு. மீளாதொழிதலாயிற்று என ஆக்கம் வருவித்துரைத்துக்கொள்க.

இதனானே இது 'சாத்தியாவியாவிருத்தி' எனப் பெயர்பெற்றது. சாத்தியம் - சாத்தியதன்மம் (துணிபொருள்). வியாவிருத்தி - வேறுபாடு. அவ்வியாவிருத்தி - வேறுபாடின்மை. சாத்தியத்தால் வேறுபாடின்மை சாத்தியாவியாவிருத்தி எனப்பட்டது. எதிரினின்றும் சாத்தியத்தால் வேறுபாடில்லை என அவாவியவழி சாதன்மியதிருஷ்டாந்தத்தினின்றும் சாத்தியத்தால் வேறுபாடின்மை என்பது குறிப்பாற் பெறப்படும். அதாவது சாதன்மியதிருஷ்டாந்தத்தில் சாத்தியதன்மம் (துணிபொருள்) உள்ளதாகவேயிருக்கவேண்டுமன்றே, அவ்வாறே வைதன்மியதிருஷ்டாந்தத்திலும் சாத்தியதன்மம் (துணிபொருள்) உள்ளதாயிருத்தலால், சாத்தியாவியாவிருத்தி (சாத்தியதன்மத்தால் வேறுபாடின்மை)யாயிற்று.

'சாத்தியாவியாவிருத்தி' என்னும் பண்பின் (குற்றத்தின்) பெயர் அப் பண்புடைய திருஷ்டாந்தப்போலிக்கு ஆனமையால் பண்பாகுபெயராயிற்று.

முன்னர்க்கூறிய சாதன்மியதிருஷ்டாந்தப்போலிநிரூபணத்தில் சாதநதன்மவிகலம் முன்னும், சாத்தியதன்மவிகலம் பின்னுமாகச் சாதநசாத்தியமுறைபற்றிச் சொல்லப்பட்டன.

இவ்வைதன்மியதிருஷ்டாந்தப்போலிநிரூபணத்தில் இதற்குரிய வெதிரேகமுறைப்படி சாத்தியாவியாவிருத்தி முன்னதாகவும், சாதநாவியாவிருத்தி பின்னதாகவும் சொல்லப்பட்டன.

இத்திட்டாந்தப்போலி நியாயப்பிரவேசத்தில் 'சாத்தியாவியாவிருத்தம்' எனச் சொல்லாற்றலால் (அபிதாவிருத்தியால்) பெயரிடப்பட்டிருக்கிறது. (இதுவும் ஒரு வேறுபாடு.)

மணிமேகலையாசிரியர் இவ் வபிதாவிருத்தியை விட்டு லக்ஷணாவிருத்தியால் 'சாத்தியாவியாவிருத்தி' எனப் பெயரிட்டகாரணம் ஆராயத்தக்கது.

2. சாதநாவியாவிருத்தம்.

இனி, நியாயப்பிரவேசத்தில் 'சாதநாவியாவிருத்தம்' என்னும் திருஷ்டாந்தப்போலிநிரூபணம் வருமாறு:—

ஸாதநாவ்யாவ்ருத்தோ யதா? கர்மவதிதி;
கர்மண: ஸாத்⁴யம் நித்யத்வம் வ்யாவ்ருத்தம்;
அநித்யத்வாத் கர்மண:। ஸாத⁴நமமூர்த்தத்வம்
ந வ்யாவ்ருத்தம்; அமூர்த்தத்வாத் கர்மண:॥

என்பது.

இதன்பொருள்: சாதநாவியாவிருத்தம்எங்ஙனமெனில்? கருமம் போலும் என்பது. கருமத்துக்கு அநித்தியத்தன்மை யுண்மையால் அதற்குச் சாத்தியதன்மமான நித்தியத்தன்மை யில்லதாயிற்று; கருமத்துக்கு அமூர்த்தத்தன்மை யுண்மையால் சாதநதன்மமான அமூர்த்தத்தன்மை ஒழிந்ததில்லை (உள்ளதாயிற்று) என்றவாறு.

இதனுள்ளும், பக்ஷ சாத்திய சாதந தர்ம வசனங்கள் முற்படக் கூறவில்லை; அவை முறையே சத்தமும், நித்தியத்தன்மையும், அமூர்த்தத்தன்மையுமாம் எனக் குறிப்பாற் கொள்ளக்கிடக்கின்றன.

மணிமேகலையில் இத்திருஷ்டாந்தப்போலி 'சாதநாவியாவிருத்தி' என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. அது வருமாறு:—

"சாத நாவி யாவி ருத்தி
யாவது சாத்திய தன்ம மீண்டு
சாதந தன்ம மீளா தொழிதல்
சத்த நித்த மமூர்த்தத் தென்றால்
யாதொன் றியாதொன்று நித்த மன்றஃ
தமூர்த்தமு மன்று கன்மம் போல
வென்றால் வைதன் மியதிருட் டாந்த
மாகக் காட்டப் பட்ட கன்ம
மமூர்த்தமாய் நின்றே யநித்த மாதலிற்
சாத்திய மான நித்திய மீண்டு
சாதந மான வமூர்த்த மீளாது" (சகச--சஉச)

என்பது.

இதனுள், 'சாதநாவியாவிருத்தி' என்றது சாதநாவியாவிருத்தி என்னும் வைதன்மியதிருஷ்டாந்தப்போலியின் இலக்கணம் என்றவாறு.

'சாதநாவியாவிருத்தி' என்னும் இலக்கியத்தின்பெயர் அதன் இலக்கணத்துக்கு ஆனமையால் ஆகுபெயர்.

இது சாதநதன்மத்தால் சாதன்மியதிருஷ்டாந்தத்தினின்றும் வேறுபாடில்லாதது என்று பொருள்படுவது. இவ்வேறுபாடில்லாமையே இத்திருஷ்டாந்தப்போலியின் குற்றமாயிற்று.

ஆவது என்றது எழுவாய்ப்பொருள்பற்றிநிற்பதொரு சொல்லுருபு.

'சாத்தியதன்ம மீண்டு சாதநதன்ம மீளாதொழிதல்' என்றது காட்டப்பட்ட வைதன்மியதிருஷ்டாந்தத்தில் சாத்தியதன்மம் இல்லதாயிருக்கச்செய்தே சாதநதன்மமட்டும் உள்ளதாயிருத்தல் என்றவாறு. (இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்திலில்லை.)

மீண்டு என்றது மீள என்பதன்றிரிபாய்ப் பிறவினைமுதல் வினைகொண்டது.

மீளல், அந்நுவயம் மறுதலைப்பட்டுத் திரும்புதலாதலால் எதிர்மறையாய் இன்மையுணாநின்றது. மீளாமை இதன் மறுதலை யாதலால் உண்மையுணாநின்றது.

இனி, இத்திட்டாந்தப்போலிக்கு உறுப்பாயுள்ள பக்ஷ சாத்திய சாதநதன்ம வசனங்கூறி உதாரணங்காட்டிவிளக்குதற்கு முதலிற் சாதநவாக்கியங் கூறப்படுகிறது 'சத்தநித்தம் அமூர்த்தத்து' என்று. இதனால், உதாரணங்காட்டற்கு எடுத்துக்கொண்ட திருஷ்டாந்த உறுப்பாயுள்ள பக்ஷசாத்திய சாதநதன்மவசனம் கூறியவாறாயிற்று.

இவற்றுள், பக்ஷம் சத்தம்; சாத்தியதன்மம் நித்தமாதல்; அது, முதலாகுபெயரால் நித்தமெனப்பட்டது. சாதநதன்மம் அமூர்த்த மாதல்; அதுவும் முதலாகுபெயரால் அமூர்த்தம் எனப்பட்டு அத்துச்சாரியைபெற்று ஆனுருபுசெய்யுள்விகாரத்தாற்றொக்கு அமூர்த்தத்து என நின்றது; அமூர்த்தமாதலால் என்பது பொருள்.

என்றால் என்றது என்றகால் என்பதன் திரிபாய் என்றவிடத்து என்னும் விடயப்பொருளுணாநின்றது; வினையெச்சமெனினுமாம். என்றவிடத்துக் கன்மம்போல என்றால் என இயையும்.

'யாதொன் றியாதொன்று நித்தமன் றஃ தமூர்த்தமு மன்று கன்மம் போல' என்றது உதாரணம்.

இதனுள், 'யாதொன்று யாதொன்று நித்தமன்று அஃது அமூர்த்தமுமன்று' என்றது வெதிரேகவியாத்திவாசகம்.

சாதன்மியதிருட்டாந்தத்துக்கு உரிய அந்நுவயவியாத்தி வாசகம், 'யாதொன்று யாதொன்று அமூர்த்தமாயுள்ளதோ அது அது நித்தமாயுள்ளது' எனச் சாதநதன்மத்தின் உண்மையை முன்னாகவும், சாத்தியதன்மத்தின் உண்மையைப் பின்னாகவும்கொண்டு கூறப்படுதலால், அதன் மறுதலையாகிய வைதன்மியதிருஷ்டாந்தத் துக்குரிய வெதிரேகவியாத்தியை, அன்னுவயவியாத்திவாசகத் துக்கு மாறாக சாத்தியதன்மத்தின் இன்மையை முன்னாகவும், சாதநதன்மத்தின் இன்மையைப் பின்னாகவும் கொண்டு கூற வேண்டுமாதலால், 'யாதொன்று யாதொன்று மூர்த்தமன்று அஃது அமூர்த்தமும் அன்று' என்று சொல்லப்பட்டது.

யாதொன்று யாதொன்று என்னும் வினவடுக்கால் அஃது என்றது அஃதஃது என்னும் சுட்டடுக்காய் எஞ்சாமைப்பொருளுணரநின்றது.

'கன்மம்போல' என்றது திருஷ்டாந்தவாசகம்; இதனாற் சொல்லப்பட்ட கன்மம் திருஷ்டாந்தப்பொருள்.

'என்றால்' என்றது இவ்வைதன்மியதிருஷ்டாந்தம் குற்றமுடைத்து எனக் காட்டுதற்கு வாதிகூற்றை அநுவதித்துக்கொண்டமைதோன்றநின்றது.

இனி இதன் விளக்கம் வருமாறு:—

'......... வைதன் மியதிட் டாந்த
மாகக் காட்டப் பட்ட கன்மம்
அமூர்த்தமாய் நின்றே அநித்த மாதலிற்
சாத்திய மான நித்திய மீண்டு
சாதந மான அமூர்த்த மீளாது'

என்பது.

இதனுள், 'வைதன்மியதிட்டாந்தமாகக்காட்டப்பட்ட கன்மம்' என்றது சத்தம் நித்தம் அமூர்த்தமாதலால் என்ற அநுமானத்துக்கு வைதன்மியதிருஷ்டாந்தப்பொருளாகக் காட்டப்பட்ட கன்மம் என்றவாறு. கன்மம் - செயல்.

'அமூர்த்தமாய்நின்றே அநித்தமாதலின்' என்றது இது சாதநாவியாவிருத்தி என்னும் திருஷ்டாந்தப்போலியாதற்குக் காரணங் காட்டியவாறு. (அதாவது) இங்கு, சத்தத்திற் சாதிக்கக்கருதிய சாத்தியதன்மம் நித்தியத்தன்மை; அதனைச் சாதிக்கக் கூறிய சாதநதன்மம் அமூர்த்தத்தன்மை; இவ்விரண்டும் சாதன்மியதிருஷ்டாந்தத்தில் இருத்தற்குரியன. அதன் மறுதலையாக இங்கெடுத்துக் காட்டும் வைதன்மியதிருஷ்டாந்தத்தில் (கன்மத்தில்) அவை இரண்டும் (நித்தத்தன்மை அமூர்த்தத்தன்மைகளிரண்டும்) இல்லனவாயொழியவேண்டும். அங்ஙனமன்றி, கன்மம் அமூர்த்தமாயும் அநித்தமாயும் (வடிவில்பொருளாயும் தோன்றி அழிவதாயும்) இருத்தலால் என்றபடி.

'சாத்தியமான நித்தியம் மீண்டு சாதநமான அமூர்த்தம் மீளாது' என்றது, வைதன்மிய திருஷ்டாந்தமாகக்காட்டப்பட்ட கன்மத்தின்கண் அநித்தத்தன்மையுண்மையால் சாத்தியதன்மமான நித்தத்தன்மை மீண்டு (இல்லதாய்) சாதனதன்மமான அமூர்த்தத்தன்மை (வடிவில்பொருளாதல்) உண்மையால் மீளாது (இல்லதாகாது). ஆதலால் சாதநாவியாவிருத்தியாம் என்றவாறு.

எதிர்நிரனிறையால், அநித்தமாதலிற் சாத்தியமான நித்தியம் மீண்டு என்றும், அமூர்த்தமாய்நிற்றலால் சாதநமான அமூர்த்தம் மீளாது என்றும் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது.

அநித்தியம் அமூர்த்தம் என்பன அதனதன்தன்மையுணர நின்றன.

'மீண்டு' என்றது எச்சத்திரிபாய் மீண்டதாக என்னும் பொருள்படநின்றது.

சாத்திய சாதநங்களுக்குக் காரியகாரணசம்பந்தமுடைமையால் ஒற்றுமைநயம்பற்றி, மீண்டு என்னும் செய்தெனெச்சம் மீளாதென்னும் பிறவினைமுதல்வினைகொண்டது எனினும் அமையும்.

இங்ஙனங் கூறியவாற்றால் சாத்தியதன்மத்தால் சாதன்மிய திருஷ்டாந்தத்தினின்றும் வேறுபாடில்லாத வைதன்மியதிருஷ்டாந்தம் சாத்தியாவியாவிருத்தி (சாத்திய அவ்வியாவிருத்தி) என்னும் திருஷ்டாந்தப்போலியாம் என்றதாயிற்று.

இனி, சாத்திய சாதநதன்மங்க ளிரண்டாலும் சாதன்மிய திருஷ்டாந்தத்தினின்றும் வேறுபாடில்லாத வைதன்மியதிருஷ்டாந்தப்போலிநிரூபணம் செய்யப்படும்.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

உ

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[கசுக-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

கிங்கரர்வதைப்படலம்.

கிங்கரரென்னும் ஒருவகுப்பு இராக்கதரை அனுமான்கொன்றதைக் கூறுவது. (கிங்கரர்-கிங்கிலியர்-ஏவலர்.)

இராவணன் அனுமானைப் பிடித்துவரும்படி கிங்கரரை ஏவல்.

[அனுமான் செய்த ஆரவாரம், பிரளயகாலத்துக் கடலின் பெருமுழக்கத்தையும் இராமன் சிவதனுசை முறித்த பேரோசையையும் போன்று, குகைக்குள் இடியிடித்தாற்போல, இராவணன் செவிக்குள் இடித்து, இடிவிழுந்த மலைகள் குலுங்குதல்போல, அவனுடைய முடிபுனைந்த தலைகள் நடுங்கச்செய்தது. அவன், 'இது குரங்கின் கூப்பாடா' வென்று குறுமுறுவல் புரிந்து, 'என் ஆர்ப்பரிப்புக்கும் மேற்பட்டதாயிருக்கிறதே' யென்று பொருமைகொண்டு, பக்கத்தில் நின்ற கிங்கரரைநோக்கி, 'இந்தக் குரங்கு எப்படியாயினும் தப்பிவிடாதபடி நாற்புறமும் மேற்புறமும் வளைந்து பிடித்துக் கொன்றுவிடாமற் கொண்டுவாருங்கள்' என்று கட்டளையிட்டான்.

அவர்கள், சர்வாயுததாரிகளாய், நிறத்தாலும் கொலைத்தொழிலாலும் பரப்பாலும் ஆலகாலவிஷத்தையும் யுகாந்தகாலத்துக் கடல்வெள்ளத்தையும் ஒத்துத் தலைகள் நிமிர்ந்து வானத்தை முட்டத் தோள்கள் விரிந்து திக்குக்களைத் தட்டத் தாள்கள் நடந்து மலைகளை எற்ற அனுமானைப் பற்றச் சென்றார்கள். அவர்கள், பிறையென விளங்கும் கோரப்பல்லும் பேரிகையென முழங்கும் வீரச்சொல்லும் உடைய பிலம்போலும் பெருவாயினர்கள்; 'போர் உண்டு' எனின், தேனுண்டதுபோலக் களிக்கும் சிந்தையர்கள்: கூட்டத்திற் காட்டையும் ஆரவாரத்தில் அலைகடலையும் ஆகிருதியில் மேருமலையையும் மிஞ்சியவர்கள்: முன் தேவரையும் அசுரரையும் சிறுபகையெனச் செயித்தவர்கள். அப்படிப்பட்டவர்கள், இப்பொழுது, மாமிசபட்சணிகளான தாங்கள் பலர், சாகபட்சணியான

தனிமைப்பட்ட அற்பக்குரங்கைப் பொருட்படுத்தி அமர்புரியும்படி யாயிற்றேயென்ற நாணம் மனத்தை வருத்த, முன்செல்வார் முதுகு தீயும்படி பின்செல்வார்மார்பு தாக்க முடுகிச்சென்று, மாருதத்தால் மேகமொழிந்து வெறுமையான வானம்போல, மாருதியால்மரங்கள் அழிந்து பாழான அசோகவனத்தை அடைந்து வளைந்தார்கள்.

அனுமான் கிங்கரரைக் கொல்லல்.

அவர்களைக் கைலைமலைபோல நின்ற அனுமான் கண்டான். கண்டு, தன்னால் தள்ளுண்டு பக்கத்திற் கிடந்த பருமரமொன் றைக் கையிற்கொண்டு, கடலைக் கலக்க அதன் நடுவில் நின்ற மந்தர மலைபோல, அரக்கரைக் கலக்க அவர் நடுவே நின்றான். மலைகளைத் தாக்கும் இடியும் பின்னிடைய, அம்மரத்தால் அரக்கவீரர் தலைக ளையும் தோள்களையும் தாக்க, மலைகளிலிருந்து அருவிகள் பெரு குதல்போல, அவர்கள் தலைகளும் தோள்களும் இரத்தம் சொரிய அவர்கள் தரையில் விழுந்து மரணமடைந்தார்கள். கதை கொண் டும் கணைகொண்டும் பொருதவர்கள், உதையுண்டு சிதையுண்டு மடிந்தார்கள். அவன் எடுத்து வீசியெறிந்ததனால், பலர் மலையிலும் பலர் கடலிலும் விழுந்து உடலையும் உலகத்தையும் ஒருங்குபிரிந்து வீரசொர்க்கம் மேவினார்கள். கை கால்கள் இழந்து முண்டமாகக் கிடந்த இராக்கதருடல்கள், இந்திரனாற் சிறகறுப்புண்டு நிலைபெய ராது கிடந்த மலைகள்போன்றன. அவன் கையாலும் தோளாலும் காலாலும் வாலாலும் தாக்குண்டு பலர் செத்தார்கள். அடிக்கப் பட்டழிந்தார் அனேகர். இடிக்கப்பட்டிறந்தார் எண்ணிலர். பிடிக் கப்பட்டொழிந்தார் பெருந்தொகையினர். அச்சத்தால் மாய்ந்தார் அளவிலர். அவன் அவர்களைக் கையாலும் மெய்யாலும் காலாலும் வாலாலும் நெருக்கி யிறுக்கி நெறித்தான். அப்போது, அவன் உடல் ஆலையும், அவர்கள் உடல்கள் கரும்புகளும், அவர்கள் இரத் தம் கருப்பஞ்சாறும், இரத்தம் போய்ச்சேரும் கடல் கருப்பஞ்சாறு வீழும் கூனையும் போன்றன.

வீரவெறிகொண்டு அரக்கர் தம் தோல்வியறியாராய் அனுமா னைச் சூழ்ந்தனர். அப்போது, அவர்கள் மேகமும் அவன் மேகஞ் சூழ்ந்த சூரியனும் போலவும், அவர்கள் கடலும் அவன் கடல்நடு நின்ற மந்தரமும் போலவும், அவர்கள் அரவங்களும் அவன் கருட னும் போலவும், அவர்கள் யானைகளும் அவன் சிங்கமும் போலவும்

ஆனார்கள். அவர்கள் எய்தும் கொய்தும் எரிந்தும் பிளந்தும் பற்றியும் எற்றியும் வளைத்தும் துளைத்தும் செய்த புண்கள் அளவற்றனவாயிருந்தும் அவன் அவைகளை அலட்சியஞ்செய்து அவர்களைப் பொருது தொலைத்தான்.

அவன் வெற்றிபெற்றதுகண்டு அவன்மீது பூமழை பொழிந்தார்கள். அப்போது, 'பூவும் புண்களும் தெரிந்தில மாருதி புயத்தில்' என்னும்படி அரக்கரும் அமரரும் முறையே செய்தனவும் சிந்தியனவுமான புண்களும் பூக்களும் இது புண் இது பூ எனப் பகுத்தறியவொண்ணாதபடியிருந்தன.

கிங்கரர் அழிந்தது இராவணனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அசோகவனத்தைக் காவல்காக்கும் தேவர்கூட்டத்தினர், கிங்கரர் இறந்ததைச் சொல்லினும் சொல்லாவிடினும் இராவணனுக்குக் கோபம்வந்திடுமேயென்று திகைப்புற்ற சிந்தையராய், அச்சம்பிடர்பிடித்துத் தள்ளக் காலொடுகால் பின்னத் தள்ளாடி நடுங்கி நடந்து, பிணங்கள்மேல் இடறிவிழுந்துசென்று அவனை அடைந்தார்கள். அடைந்தவர்கள் நடந்ததைச் சொல்ல நாவெழாமல், ஊமர்போலக் கைகளினாற் சைகைசெய்து தெரிவித்தார்கள். அவன் 'யான் ஏவிய கிங்கரர் இறந்தனரோ? ஓடியொழிந்தனரோ? யாதுற்றது? வாய்விட்டுக் கூறுங்கள்' என, அவர்கள், 'அனைவரும், அஞ்சாது போர்புரிந்து பொய்ச்சாட்சிபுகல்வார்குலங்கள் நிர்மூலமாவதுபோல இறந்தார்கள்' என்றார்கள்.]

கிங்கரர்வதைப்படலம் முற்றியது.

சம்புமாலிவதைப்படலம்.

அனுமான் சம்புமாலியென்ற படைத்தலைவனை அவன் படையுடன் கொன்றதைக் கூறுவது.

இராவணன் அனுமானைப் பிடித்துக் கோணரும்படி சம்புமாலியை ஏவல்.

[இராவணன், அருகே, கும்பிடுகையனாய்நின்ற சம்புமாலியை நோக்கி, 'நீ சேனையோடுசென்று அந்தக் குரங்கைக் கொன்றுவிடாது பிடித்துக்கொண்டுவா' என்று கட்டளையிட்டான். அவன், 'வல்லோர் பல்லோ ரிருக்க, "இது செய்யத்தக்கவன் இவனே"

என்று எம்பெருமான், இந்தக் கட்டளையை எனக்கிட்டான். என்னினும் தன்னியன்* இல்லை' யென்று சொல்லி, இராவணனது உயுத்த கோபமே உருக்கொண்டு புறப்பட்டாற்போலத் தன் சேனையோடும் தன் தந்தையும் பிறரும் தந்த சேனைகளோடும் புறப்பட்டுப்போனான்.

சேனைத்தூளும் தோகையும்.

சேனை செல்லுதலால், இலங்கைநகரின் பொன்தரையினின்று எழுந்த தூள்கள் பறந்து பரந்து படிய, மேருமலைபோல வேறு மலை யாவையும் பொன்மலைகளாயின; இந்திரன் நகர்போல எல்லா நகர்களும், பொன்னகர்களாயின. சம்புமாலி செல்லும் தேரைச் சூழ்ந்து பதினாயிரந் தேர்களும், அவற்றின் இரட்டி ஆனைகளும், அவற்றின் இரட்டி குதிரைகளும், அவற்றின் இரட்டி காலாட் படையும் சென்றன.

அனுமான் போருக்கு ஆயத்தனாய் ஆரவாரித்தல்.

அனுமான் அசோகவனத்துள்ளே செல்லும் வழிமுகப்பிலே யுள்ள தோரணவாயிலிலே, இராக்கதசேனை எதிர்வருகையை நோக்கி நின்றான். அவன், மேகங்கள் வெருவி இடிகளைக் கக்க, நாகங்கள் நடுங்கி உயிரும் விடமும் ஒருங்கு கக்க, அரக்கர்கள் திடுக்கிட ஆரவாரித்தான். திடுக்குற்றமை தீர்ந்தவுடன் இராட்சச சேனை எதிராரவாரம் செய்தது.

சம்புமாலி படைவகுப்பும் அனுமான் படைவகுப்பும்.

சம்புமாலி, தன் படையை முற்படை பக்கப்படை பிற்படைகளாக அணிவகுத்து அனுமான்மீது போர்புரிவானானான். அனுமானும், தன் நெற்றியே †நெற்றியென்னும் முன்னணிப்படையாகக் கைகளே கைகளென்னும் பக்க அணிப்படைகளாகக் கூழையே (வாலே) கூழையென்னும் பின்னணிப்படையாகத் தானே அணி வகுத்த சேனையாக, அமர்புரிதற்கு ஆயத்தனானான். (அமர்-போர்)

அரக்கர்சேனை அழிதல்.

இராக்கதவீரர் அனுமான்மீது படைக்கலங்களை விடுத்தனர். அவன், அவைகளை அடித்தும் ஒடித்தும் அப்புறப்படுத்தினான்.

---

*தன்னியன் - பாக்கியவான்.

† நெற்றி, கை, கூழையென்பன படைவகுப்புக்களின் பெயர்கள். கூழை வாலுமாம்.

பின்பு, அவன், இராசன் செங்கோல் இராச்சியமெங்குஞ் செல்லுதல் போலவும் இருவினைகளை வென்ற ஞானவான்களின் அறிவு எங்கும் வியாபித்தல்போலவும் இராட்சசசேனையெங்கும் சென்று, காற்ருடி போலவும் வேசையர்மனம்போலவும் ஓரிடத்தும்நில்லாது சுழன்று, ஒருவரையும் உய்யவிடாமல் எல்லாரையும் இருப்புத்தண்டு கொண்டு அடித்துக் கொன்ருன்.

சம்புமாலி சாகுதல்.

சம்புமாலி தனியனுகிக் கொடுங்கோபங்கொண்டு அனுமானை எதிர்த்தான். அனுமான், 'உன்னுடன் வந்தாரைக் காக்கமாட்டாதுபோனுய். ஒருதவியுமின்றி ஒருவனுயுள்ளாய். உன்னைக் கொல்லாதுவிடுகின்றேன். திரும்பிப்போ' என்ருன். அவன், 'செத்துப்போனுருள் ஒருவன்போல என்னைஎண்ணினுயோ!' என்று சீறி, ஒன்று பத்து நூருயிரமாக அம்புகளை எய்தான். அனுமான், அவைகளனைத்தையும் இருப்புத்தடியால் விலக்கினுன். அதனை அரக்கன் அம்பினுல் அறுத்தான். அறுக்கவே, அனுமான், அவன் தேரிலே பாய்ந்து, அவன் வில்லைப் பிடுங்கி, அவன் கழுத்தில் மாட்டி யிழுக்க, அவன் வாய்பிளந்து, அலறிவிழுந்து மடிந்தான்.

சம்புமாலிசாவை அசோகவனகாவலர்
இராவணனுக்கு அறிவித்தல்.

அசோகவனத்தைக்காக்கும் தேவர்கள், இராவணனிடம் போய்ச் சம்புமாலி சேனையோடு செத்துப்போனதைச் செப்ப மாட்டாராய், விக்கி விம்மி அழ, அவன் சிரித்து, 'நடுங்காமல் நடந்ததைச் சொல்லுங்கள்' என, அவர்கள், 'சம்புமாலி உள்பட நம்மவரெல்லவரும் நாசமானுர்கள். நாசஞ்செய்த குரங்கு ஒன்றே' என்ருர்கள்.

சேனைத்தலைவர் தெரிவித்தல்.

இராவணன் 'அந்தக் குரங்கை யானே போய்ப் பிடிப்பேன்' என்ருன். அப்போது, அங்கு நின்ற பஞ்சசேனுபதிகளென்ற ஐந்து படைத்தலைவர்கள் அறிவிப்பாரானுர்கள். (அவர்கள் அறிவிப்பு, அடுத்த படலத்தின் ஆரம்பத்திலுள்ளது.)]

சம்புமாலிவதைப்படலம் முற்றிற்று.

பஞ்சசேனபதிகள் வதைப்படலம்.

பஞ்சசேனபதிகளென்னும் படைத்தலைவர் ஐவர்களைப் படைகளோடு அனுமான் அழித்ததை உரைப்பது.

[மேற்கூறிய பஞ்சசேனபதிகள், 'அந்தக் குரங்கை யானே பிடிப்பேன்' என்றெழுந்த இராவணனைநோக்கிக் 'கருடபகவான் கொசுகினுடனே பொருதசெயல்போல், நீ ஏழைக் குரங்கை யெதிர்ப்பையாஞல், அருவிநீரற்ற பருவதம்போல உன்னால் மதநீர் மாறிய திசையானைகள் பயம் தொலைந்து மதம்பொழிவனவாம். உன்னை உன்னி உள்ளம் நடுங்கும் வெள்ளிமலை எள்ளளவு அச்சமும் இல்லாததாய்விடும். உன்னை எதிர்தலால் எய்துவது இழவேயன்றி இலாபமில்லையென்று எண்ணி மூலைகளில் முடங்கியிருக்கும் மும்மூர்த்திகளின் முகங்கள் புன்முறுவல் பூப்பனவாம். அன்றி, எவர்துணையும் இல்லாதவனென் றெள்ளப்படுவாய். குரங்கு பிடிபடாத குறைவு, வெல்ல வல்லவ ரல்லவரை விட்டதனால் விளைந்த விளைவு. எங்களை ஏவுக' என, இராவணன் இசைந்தான்.

அவர்கள், அவன் சம்மதிப்பை வெகுமதிப்பாகக்கொண்டு, உலகமூன்றையும் ஒருங்குபெற்றவர்போல உள்ளம் உவந்து, நெற்றி நிலம்பட விழுந்து பணிந்து, விடைபெற்றுப் படைசுற்றப் போர்க்குப் புறப்பட்டார்கள்.

அவர்கள் ஐவரும், பஞ்சபூதங்கள்போலப் பலம் படைத்தவர்கள்; அமரர்க்கும் முனிவர்க்கும் ஐம்பொறிபோலத் துன்பம் விளைப்பவர்கள்; இந்திரன் வச்சிராயுதமும் இயமன் தண்டாயுதமும் இம்மியளவு வடுவும் இயற்ருத தோள்களுடையவர்; சூரனைத் தொலைத்த சுப்பிரமணியனது மயிலினின்றும், பாரினைப் படைத்த பிரமனது அன்னத்தினின்றும் பறித்த இறகுகள் சொருகிய இரத்தின கிரீடத்தினர். இராவணன்மார்பிற் பாய்ந்து முறிந்து எஞ்சிய திசையானைக் கொம்புகளை அரிந்துசெய்த அழகொழுகும் குழைகள் அணிந்தவர். அந்த யானைகளின்மத்தகத்தில் அணிந்திருந்த பொன்னோடைகளைத் தம் நெற்றிப்பட்டங்களாகப் புனைந்தவர். அவர்களுடைய ஏனைய ஆபரணங்கள், இராவணன் குபேரனைவென்று அவன்செல்வத்தைக் கொள்ளைகொண்டநாளில் வாரிவந்தவை.

'இயமன், உனக்கன்றிப் பிரமனுக்கு ஆளாய், அவன் விதிப்படி உன் கோனுக்குட்பட்ட குடிகளின் உயிர்களையும் கவர்கின்றான்'

எனக் கேட்டுச் சீறிய இராவணன் சீற்றத்தை மாற்ற, அவர்கள், காலனைப்பிடித்துக் கால்களையும் கைகளையும் கட்டிய சூரர்கள்.

அப்படிப்பட்டவர்கள் சேனைகளுடன் சென்று அனுமானை எதிர்த்தார்கள். சேனுவீரர் சோனுமாரியாக அம்புகளைப் பொழிந்தார்கள். அந்த அம்புகள் அவன்மேல் தாக்குதல் தினவுதீரச் சொறிதல்போலவாக, அவன் தூங்குவான்போலக் கண்மூடியிருந்தான். அவர்கள் அதுகண்டு சினங்கொண்டு நெருங்கியபோது ஓர் இரும்புத்தடியை எடுத்துச் சுழற்றியடித்து நால்வகைச் சேனைகளையும் நாசமாக்கினன். அவனுல் விசைத்து வீசியெறியப்பட்டதனுல்,— தம்மேல் உயர்த்தப்பட்ட சேலைக்கொடிகளையுடைய யானைக் கணங்கள் கடலில் விழுந்து அழுந்துவன, கடலிற் பாய்மரத்தோடு முழுகும் கப்பல்கள் ஒத்தன; கடலில்விழும் தேர்கள் கடலினின்றெழும் சூரியனது தேரினை நேர்வனவாயின; வாயினின்று இரத்தங் கக்கிக்கொண்டு கடலில்விழும் குதிரைகள், கடலில் உள்ளதும் வாயினின்று நெருப்புச்சுவாலை புறப்படுவதுமான வடவையென்னும் குதிரையை நிகர்த்தன; அவன் காலாட்படைகளை வாலாற் சுற்றிச் சுழற்றியெறிய, அப் படைக்கூட்டம் சுழன்றுகொண்டு கடலில்விழும் காட்சி, கடலில் அமுதமதனகாலத்தில், மந்தரமலை சுழலுந் தோற்றம்போன்றது.

கொல்லுதற்கு ஆயுதங்களாக, மலைகளும் மரங்களும் இரும்புத் தடிகளும் எண்ணிறந்தன இருந்தன; கொன்ற உயிர்களைக் கொண்டுபோக இயமன் சித்தமாயிருந்தான்; ஆனதனுல், அளவற்ற அரக்கரனைவரும் அனுமானுல் அடிபட்டுச் செத்துப்போனுர்களன்றித் தப்பிப்போனுர் எவரும் இலர்.

சேனைகள் யாவையும் செத்தொழிந்ததுதெரிந்து, சினங்கொண்டு, பஞ்சசேனுபதிகள் அனுமானை அணுகி அம்புமாரி பொழிந்தார்கள். அவன் அவைகளைத் தன்மேல் தாக்காமல் தடுத்து அழித்தான். பின்பு, ஐவருள் ஒருவன்தேரைச் சிதைத்தான். தேர்சிதைந்தவன் ஆகாயத்தில் எழ, அவனை அனுமான் இரும்புத்தடிகொண்டோச்ச, அதை அவன் வில்லினுல் தாங்க, வில் முறிய, மலையை எடுக்க, எடுத்த மலை எறியப்படுமுன் அவனை அனுமான் இரும்புத்தடியால் அடித்துக் கொன்ருன்.

மிஞ்சின நால்வரும் வெஞ்சினங்கொண்டு வில்லுகளைவளைத்து அம்புகளை எய்தார்கள். அனுமான் அவர்கள்மேல் ஒரு மலையை எறிய, அவர்கள் அதனைப் பொடியாக்கினார்கள். அவன் அந்த நால்வருள் ஒருவனைத் தேரோடெடுத்து மேலேயெறிய, எறியப் பட்டவன், அந்த இரதம் மேலேசென்று கீழேவிழுமுன் பூமியிற் குதித்தான். குதித்தவன்மேல், யானைமீது சிங்கம் பாய்ந்தாற் போலப் பாய்ந்து, குதித்து மிதித்துக் கொன்றான். எஞ்சிய மூவரும் 'எங்கே தப்புவாய்' என்று எதிர்க்க, அவர் இருந்த தேர் களில் இரண்டை இரண்டு கைகளி லெடுத்துக்கொண்டு எழுந் தான். எழவே, அவர்கள் ஆகாயத்திலே பாய, அவர்கள் மேலே தப்பிப்போகாமல் விரைந்து கிட்டப்போய் அவர்கள் பிடித்திருந்த வில்லுகளைத் தொடுத்திருந்த அம்புகளுடன் தொலைத்தான். தொலைக்கவே, நிராயுதரான அவர்கள், அவனுடன் ஆகாயப்போர்க் களத்தில் மல்லயுத்தம் செய்யலானார்கள்.

வெண்பல்லும் கருமேனியும் பகுவாயும் உடைய அவர்கள் வெண்மையான பல்லும் கருமையான உடலும் பிளந்த வாயு முடைய பாம்புகள்போன்றனர். அனுமான் சூரியன் ஒத்தான். அவன் அவர்கள் தோள்களை வாலினால் வரிந்து இறுக்கி முறிக்க, அவர்கள் இறந்து பூமியில் விழுந்தார்கள். அப்போது ஆகாயத்தில் விளங்கிய அவன் பாம்புகள் நீங்கின பரிதியை நிகர்த்தான். தனி யனாய்த் தப்பிநின்ற தலைவனது தலைமேலே, அனுமான் ஆகாயத்தி னின்று குதிக்க, அவன் தேரோடு பூமிக்குள் அழுந்தி யிறந்தான்.

தீயவழிகளிற் சென்ற ஐவரையும் வென்ற அனுமான், தீவழிச்செல்லும் ஐம்பொறிகளையும் அடக்கிய அறிவை ஒத்தான்.

அசோகவனகாவலரான பருவத்தேவர் இராவணனிடம் சென்று பஞ்சசேனாபதிகள் படைகளோடு அனுமானால் அழிந் ததை அறிவித்தனர்.]

பஞ்சசேனாபதிகள் வதைப்படலம்
முற்றுப்பெற்றது.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

உ

ரமாமணி.

[ரமாமணி என்னும் இந்த நவீனகதையானது, ஸ்ரீராமநாதவித்யாலய அத்யக்ஷராயிருந்து இளைப்பாறிவருபவரும் வித்வச்சிரேஷ்டரும் நியாயவாதியுமான ப்ருஹ்மஸ்ரீ V. S. ராமஸ்வாமிசாஸ்திரி (B.A. B.L.) அவர்களால் வங்கபாஷையிலிருந்து தமிழில் படிப்பவர் மனங்களிக்கும் வண்ணம் சுவைமிகுந்த விருந்துணவாகப் படைக்கப்பட்டது. நவீனங்களுக்குரிய இலக்கணங்களமைய, படிப்பவர்கள் இனி என்னசெய்தி நிகழப்போகிறதென அவாவிநிற்கும்வண்ணம் இனியவசனங்களால் எழுதப்பட்டிருக்கிறது. சாஸ்திரியவர்களுக்குள்ள ஸம்ஸ்க்ருதபாண்டித்யத்தோடு சேர்ந்த வங்கபாஷாபாண்டித்யம் இதை எழுதச்செய்திருக்கிறது. பிரஸித்தபண்டிதர்களால் எழுதப்பட்ட இத்தகைய புத்தகங்கள் பண்டிதர்களின் உயர்ந்த மனோபாவங்களையும் உலகவழக்கிலுள்ள பலவகை நிகழ்ச்சிகளையும் ஒழுக்கவழக்கங்களையும் எதிர்பாராத சம்பவங்களையும் ஆங்காங்கு உணர்த்துதற்குரியன. ஆங்கிலம், ஸம்ஸ்க்ருதம், ஆந்திரம், தமிழ், ஹிந்தி, வங்காளி முதலிய பாஷைகளில் வல்லுநரான சாஸ்திரியவர்கள் இன்னும் பல புத்தகங்கள் எழுதி அவர்கள் வைதுஷ்யத்தை உலகிற்குப் பயன்படுத்திவரும்படி அவர்களுக்கு எல்லாநன்மையும் இடையறாதியலும்வண்ணம் ஈசன் திருவருள்பாலிக்கவேண்டுகிறேன். பத்திராசிரியர்.]

முகவுரை.

சிலவருஷங்களுக்குமுன், வங்கதேசத்தில் விளங்கினவரான, சுவர்க்கவாஸி, பாபு வங்கிம்சந்திர சட்டோபாத்தியாயரவர்களால், வங்கபாஷையில் இயற்றப்பெற்ற 'கபாலகுண்டலா' எனும் ஒரு கதையை அநுசரித்து, 'ரமாமணி' யென்று நாமஞ்சூட்டி, ஒரு சிறுநவீனகத்தை நாம் எழுதியுள்ளோம்.

சட்டோபாத்தியாயரவர்கள் இங்கிலீஷிலும் சிறந்த பண்டிதர். வங்கபாஷையில் உலகப்பிரசித்திபெற்ற கவியுமாவர். அந்தப் பாஷையிலுள்ள வசனநடைக்கு அவரே 'பிதா' எனலாம்.

'கபாலகுண்டலா'வை அநுவாதஞ்செய்ததில், சிற்சில இடங்களில் நமது நவீனகத்துக்கு ஒத்திருக்கும்படி, ஊர்களையும் பெயர்களையும் மாற்றியும், சிற்சில பாகங்களை விட்டுவிட்டும், இயன்றவரை யெழுதியுள்ளோம்.

ஒருபாஷையிலிருந்து மற்ருெருபாஷையில் அநுவாதம் செய்தால், ரஸம் குறைந்துபோம். மூலக்கிரந்தத்திலுள்ள, சமத்காரமும் காம்பீர்யமும், ஸௌந்தர்யமும், அநுவாதகாவியத்தில் இரா. மூலக்கிரந்தத்தைக் கூடியமட்டில் அநுசரித்து, இந்நவீனகத்தை யெழுதியிருக்கிருேம். மேலும், கடைசியதிகாரத்தைச் சுயமாக, எழுதிச் சேர்த்திருக்கிருேம்.

இந்நவீநகத்திலும், ரஸபாவங்களும், அலங்காரவிசேஷங்களும் இருக்கின்றன. இதைப் படிப்பதால், ரஸிகஜனங்களுக்கு ஒருவாறு திருப்தியுண்டாகுமென்று நம்புகிருேம். இது அரஸிகஜனங்களின் பார்வையில், விழாமலிருக்கவேண்டுமென்று, பரமேசுவரனைப் பிரார்த்திக்கிருேம்.

"இதர..................ரமிவ"

"ஹே! நான்குமுகம்படைத்த பிரும்மதேவரே! உமது விருப்பத்தின்படி (என்தலையில்) எழுதப்பட்டவையான, மற்றப் பாவப்பயன்களைப் பொறுத்துக்கொள்வேன்; ஆனல் ரஸிகரல்லாதவரிடம் (எனது) காவியத்தைத் தெரிவிப்பதென்ற (இழிவானகாரியத்தை), என்தலையில் வரையவேண்டாம், வரையவேண்டாம், வரையவேண்டாம்" என்று ஒரு கவி சொல்லியிருக்கிறபடி, அரஸிகர்களிடம் சென்று, அவர்களிடம் காவியத்தை எடுத்துரைப்பது மிகவும் இழிவானகாரியம்.

ஆடவர்களிலோ, மடந்தையர்களிலோ, ரஸிகர்கள் சிலரேயிருக்கிருர்கள். தாங்கள் ஸ்வயமாகவே, நன்ருய்ப் பேசவும் எழுதவும் தெரிந்துகொண்டவர்களும் காவ்யரஸத்தைத் தெரிந்து அனுபவிக்கமுடியாதவர்களாயிருக்கிருர்கள். வேறுசிலரோ, தங்களுக்குப் படிப்புக் குறைவாயிருப்பினும், காவ்யரஸத்தைப் பூர்ணமாயநுபவிக்கச் சக்திவாய்ந்தவர்களாயிருக்கிருர்கள். 'ரஸிகர்' என்பவர் ஒரு தனிவகுப்பினர்.

இந்நூலை ரஸிகசிகாமணிகளின் கரகமலங்களில் மிகவும் வணக்கத்துடன் ஸமர்ப்பணம் செய்கிருேம்.

பெரியோர்களே! ரஸிகர்களே! இச்சிறுகாவியத்தில் குற்றங்கள் பலவென்றும், குணங்கள் மிகச்சிலவென்றும் நாம் அறிவோம். தங்களுக்கு இயல்பாயுள்ள கருணைக்கண்களால் இதைக் கடாக்ஷித்துக் குற்றங்களைத் தள்ளிவிட்டுக் குணங்களைக் கிரகித்துக் கொள்வீர்களாக; எனக் கேட்டுக்கொள்கிறோம்.

𑌗𑍁𑌣𑌦𑍋𑌷𑍌 𑌬𑍁𑌧𑍋 𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍
𑌨𑍍𑌨𑌿𑌨𑍍𑌦𑍁 𑌕𑍍𑌷𑍍𑌵𑍇𑌡𑌾 𑌵𑌿𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌃।
𑌶𑌿𑌰𑌸𑌾 𑌶𑍍𑌲𑌾𑌘𑌤𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂
𑌪𑌰𑌂 𑌕𑌣𑍍𑌠𑍇 𑌨𑌿𑌯𑌚𑍍𑌛𑌤𑌿॥

பாற்கடலைக் கடைந்தபோது பரமசிவனுக்குச் சந்திரனும் விஷமும் கிடைத்தன; அவர் முந்தினதைத் தனது முடியிற் சூடிக் கொண்டு பிந்தினதைக் கழுத்தில் மறைத்துக்கொண்டதுபோலப் பண்டிதர் குணங்களைக் கிரகித்துக்கொண்டு குற்றங்களை மறைத்து விடுவர்.

V S ராமஸ்வாமிசாஸ்திரி.

முதற்கண்டம்.

முதலதிகாரம்.

"Floating straight obedient to the stream."
Comedy of Errors

(நதியின் வேகத்துக்குட்பட்டு நேராக மிதக்கிறது.)

சிலவருஷங்களுக்குமுன், மகரமாதத்தில் ஓர் இரவின் இறுதியில், யாத்ரீகர்களுடன், ஒருபடகு கன்னியாகுமரியிலிருந்து கடல் வழியாகத் திரும்பிவந்துகொண்டிருந்தது. மாலுமிகளான செம்படவர்கள் அலையின் வேகத்துக்குப் பயந்து, அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இருட்டின்மிகுதியால், இன்ன இடத்தில் இன்னவஸ்து இருக்கிறதென்று, அவர்களால் தெரிந்து கொள்ளமுடியவில்லை. படகிலிருப்போர்களில் அநேகர், நித்திரையில் ஆழ்ந்திருந்தார்கள். ஆனால் கிழவரொருவரும் இளைஞனொருவனும் மட்டும் விழித்திருந்தார்கள். அக்கிழவர் படகோட்டிகளை நோக்கி, "இன்னும் நாம் போய்ச்சேரவேண்டிய இடத்துக்கு எவ்வளவுதூரமிருக்கும்?" என்று வினவினார்.

மாலுமிகள் இங்குமங்கும் திரும்பிப்பார்த்து, "ஐயா! எங்களுக்கே தெரியவில்லையே, எங்களாற் சொல்லமுடியவில்லை," எனப் பதிலுரைத்தார்கள்.

கிழவருக்குச் சினமுண்டாகி, மாலுமிகளைப் பழிக்கத் தொடங்கினர், அப்போது வாலிபன் மிருதுவான இசையுடன் அவரைப்பார்த்து, "ஐயா பெரியோரே! பண்டிதர்களாற்கூடக் கணக்குப்பார்த்துச்சொல்லமுடியாதே; பேதைகளும் படிப்பற்றவர்களுமாகிய படகோட்டிகளால், எங்ஙனம் நிச்சயமாய்க் கூறமுடியும்," என்று வணக்கத்துடன் சொன்னான்.

கிழவர் உக்கிரமாக "இவர்கள் சோம்பேறிகள். வேறு ஞாபகத்துடன் படகையோட்டுகிறார்கள். இவர்கள் செய்வதைப் பார்த்தால், நாம் ஊர்போய்ச்சேர்வதற்கு, இன்னும் ஒருவருஷம் செல்லும்போலிருக்கிறது" என்று மறுபடியும் கூச்சலிட்டார்.

அப்போது அவ்வாலிபன் " மாலுமிகளுக்குப் படிப்புக் கிடையாதே; தெய்வாதீனமாய்வந்த கெடுதியால் அவர்கள், ஒன்றும் தெரியாமல் மலைக்கிறார்கள்," என்று மிருதுவாகப்பதிலுரைத்தான்.

அக்கிழவர் "அப்படியானால், நீங்கள் ஊர்போய்ச்சேர்வதெங்ஙனம்?"

"நான் முன்னமேயே சொன்னேன்; 'கடல்கொந்தளித்திருக்கிறது, சற்றுநேரம் கழித்துப் புறப்படுவோம்,' என்று. இப்பொழுது பகவத்கிருபையால் எது சம்பவிக்கிறதோ, அது நடக்கட்டும். நாம் இப்போது காண்கிற காட்சியை, ஜன்மஜந்மாந்தரத்திலும், நம்மால் மறக்கவேமுடியாது" என்று இளைஞன் பதிலுரைத்தான்.

மகாகவி காளிதாசன், தனது ரகுவம்ஸகாவ்யம் 13வது சர்க்கம், 15வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறபிரகாரம், "இருப்புச் சக்கிரத்துக்கொப்பான உப்புக்கடலின் கரையானது, ஒரு தாரையாகக் கட்டப்பட்ட கருப்புரேகையைப்போல், வெகுதூரத்தில் சிறியதாகவும், பச்சிலைமரங்கள் பனைமரங்கள் அடர்ந்ததான, கானகத்தின்வரிசையைப்போல், நீலநிறமுள்ளதாகவும், விளங்குகிறது."

அப்பெரியோரின் செவிகளில் இக்கவிதையின்ரஸம் நுழைய வில்லை. மாலுமிகள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதையே அவர் கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தார்.

ஒருமாலுமி மற்றொருவனைநோக்கி "அண்ணே! நாம் என்ன காரியம் செய்தோம். இங்கேயிருந்தே நாம் உயிர்விடவேண்டியது தான்; எவ்விடத்தில் இருக்கிறோமென்றுகூடத் தெரியவில்லையே?" என்று அச்சமிகுதியால் நடுங்கின குரலுடன் சொன்னான்.

கிழவன் "என்ன ஆபத்தில் மாட்டிக்கொண்டோமோ" எனப் பயந்து, "மாலுமிகாள்! என்ன நேர்ந்தது?" என வினவினான். மாலுமி கள் பதிலுரைக்கவில்லை.

அப்பொழுது அவ்வாலிபன் "நேரத்தைக் கவனிக்காமல், பிரயாணம்புறப்பட்டோம்; இப்பொழுது, அநேகமாய் விடியற்கால மாகிவிட்டது. நான்குதிசைகளிலும் திரண்ட இருள் மூடிக்கொண் டிருக்கிறது. ஆகாயமாவது, சந்திரனாவது, நக்ஷத்திரங்களாவது, சமீபத்திலிருக்கிற கரையிலுள்ளவஸ்துக்களாவது, கண்களுக்குத் தெளிவாய்த் தெரியவில்லை. மாலுமிகள் திக்பிரமையடைந்து விட்டார்கள்போல் தோன்றுகிறது" என இயம்பினான்.

குளிரினால், படகைச்சூழத் திரை விரிக்கப்பட்டிருந்தது. ஆதலால், படகிலிருப்போர்க்கு, இந்தச்சங்கதியொன்றும் தெரிய வில்லை. அந்த வாலிபன் வரும் ஆபத்தைத் தெரிந்துகொண்டு கிழவரிடம் தெரிவித்தான். அதைக் கேட்டவுடன், யாத்ரீகர்கள் கூக்குரலிட்டு "ஐயோ! ஐயோ!" என்று கதறத்தொடங்கினார்கள். இளைஞன் "என்ன நேர்ந்திருக்கிறது என்று தெரிந்துகொள்ளா மலே, என் இப்படி அலறுகிறீர்கள்" என்று அவர்களைச் சமா தானப்படுத்தினான்.

இதைக்கேட்டவுடன், யாத்திரிகர்களின் ஆரவாரம் அதிகரித் தது. மாதர்கள் அழத்தொடங்கினார்கள். வாலிபன் அவர்களுக்குத் தேறுதல்சொல்லி, "விடிந்துவிட்டது, நாலைந்து நாழிகைகளில் சூரியோதயமாகிவிடும். பயப்படவேண்டியது ஒன்றுமேயில்லை.

படகை ஓரிடத்தில் நிறுத்திவிடச்சொல்வோம். படகுநின்ற இடத்திலேயே இருக்கட்டும். வெய்யில் வந்தவுடன் நன்ருய்ப் பார்த்துத் தெரிந்துகொள்வோம்'' என்று சமாதானப்படுத்தினுன்.

படகோட்டிகள் அவனது ஆணைப்படி செய்தார்கள். பிறகு மாலுமிகள் ஒன்றும்செய்யாமல், சிறிதுநேரம் சும்மா இருந்தார்கள். யாத்திரீகர்கள் தங்கள் உயிர்களைக் கையிற்பிடித்திருந்தார்கள். அவர்களுக்கு அலைகளின் அசைவும் கொந்தளிப்பும் தெரியவில்லை. நல்லவேளையாகப் புயற்காற்று ஒன்றுமில்லை. அவர்கள் தங்களுக்குச் சாவுகிட்டிவிட்டதாகவே, நிச்சயம் செய்தார்கள்.

புருஷர்கள் சந்தடியொன்றும் செய்யாமல், ஸ்ரீ துர்க்காதேவியின் நாமஜபம்செய்துகொண்டிருந்தார்கள். பெண்பிள்ளைகள், வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, உரத்த குரலுடன் அழத்தொடங்கினுர்கள். ஒரு கிழவி புண்ணியநதியில் மூழ்கிச் சுவர்க்கமடையவேண்டுமென்று, சமயத்தை யெதிர்பார்த்திருந்தாள்; அவள்மட்டும் அழவில்லை.

இளைஞன் நக்ஷத்திர உச்சத்தைப்பார்த்துக் கணக்கிட்டதில், விடிய ஒரு யாமமிருக்கும்போல் தோன்றிற்று.

இச்சமயம் மாலுமிகள் தங்களுடைய இஷ்டதேவதைகளான நதிதேவியையும் சமுத்திரராஜனையும் பிரார்த்தித்தார்கள். பிறகு கோலாகலத்துடன் அவர்கள் எழுந்ததைப்பார்த்து, யாத்ரீகர்கள் பயத்துடன் 'என்ன? என்ன? யாது நேர்ந்தது?' என வினவினுர்கள். மாலுமிகள் ஒரேகூச்சலாகப் "பொழுதுவிடிந்தது; பொழுது விடிந்தது'' என, ஆரவாரம் செய்தார்கள். அப்பொழுது யாத்திரீகர்கள், படகின் ஓரத்துக்குவந்து, வெகு ஆத்திரத்துடன் உற்றுப் பார்த்துப் பிரகாசத்தினுல் இருள் விலக்கப்பெற்றுத் திசைகள் ஒளிர்வதைக்கண்டு சந்தோஷமடைந்தார்கள். படகு சமுத்திர மத்தியிலில்லையென்றும், விசாலமானதோர் ஆற்றின்முகத்துவாரத்தில் நிறுத்தப்பெற்றிருக்கிறதென்றும் தெரிந்துகொண்டார்கள்.

அவ்விடத்தில் ஆறு மிகவும் அகலமாயிருந்தது. இவ்வித அகலம் வேறோரிடத்திலும் இல்லை. நதியின் ஒருகரை படகுக்குச் சமீபத்திலிருந்தாலும் மற்றொருகரை கண்ணுக்கெட்டவில்லை. எங்கே பார்த்தாலும், அநந்தமான நீர்ப்பெருக்கு, அலைந்துகொண்டிருக்கிறதான சூரியஒளியால் வானுடன் கலந்துநின்றது. சூரியப்பிரகாசத்தால், திசை இதுவென்று அறிந்துகொள்ளப்பெற்றது. அருகிலிருக்கிற நீர் பளிங்குபோல் தெளிவானது; தூரத்திலிருக்கிற ஜலம் நீலநிறமுள்ளது.

மகாசமுத்திரத்தின் மத்தியில் நமக்கு மரணம் கிட்டிவிட்டதெனநினைத்திருந்த பிரயாணிகள், ஆற்றின் கரையைக்கண்டு நாம் இனிப் பிழைத்தோமெனத்தேறினார்கள். சமீபத்திலிருக்கிற கரை, கடலின் மேற்குக்கரையெனத் தெரிந்துகொண்டார்கள். மெல்லச் செல்கிறதாயும், சூரியவெளிச்சத்தில் மின்னுகிறதாயும், தங்கநிறமுள்ளதாயும், உள்ளதோர் ஆற்றுவெள்ளம் கண்ணுக்குப் புலப்பட்டது. முகத்துவாரத்துக்குத் தென்பக்கத்தில், ஒரு மணற்குன்றின்மேல் கணக்கிலடங்காத பறவைக்கூட்டங்கள், ஒலித்துக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இருந்தன. அந்த ஆறு" தாம்பிரவர்ணிநதி" யெனத் தெரியவந்தது.

இரண்டாம் அதிகாரம்

நதியின் கரையில்

Ingratitude! Thou marble hearted fiend!

King Lear.

(நன்றியின்மையே! கல்நெஞ்சுகொண்டபேய் நீ)

யாத்ரீகர்களின் ஸம்பாஷணை முடிந்தது.

மாலுமிகள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டதால், சற்றுத் தாமதமாயிற்று.

எதிரில் காணப்படுகிற மணல்மேட்டின்மேல், சமையல்செய்து ஆகாரம்செய்துகொண்டு ஊருக்குப்போவோம் என்று, யாத்திரீகர்கள், ஆலோசித்தார்கள். அதற்கு நாவிகர்களும் சம்மதித்துப் படகைக் கரையோரத்தில் நிறுத்த, யாத்ரீதிகர்கள் இறங்கி ஸ்நாநம் முதலிய காலைச்சடங்குகளைச் செய்யத்தொடங்கினார்கள்.

பிறகு சமையல்செய்வதற்காக யோசிக்கும்போது, வேறொரு ஆபத்து நேரிட்டது. படகில் விறகில்லை. கரையிலிருக்கிற காட்டில் நுழைந்து விறகுகொண்டுவர யாரும் சம்மதிக்கவில்லை. எல்லோரும் அன்று பட்டினிகிடக்கவேண்டியிருக்குமென்பதை நினைத்துக் கிழவர் மணிராஜனைநோக்கி, (இளைஞன் பெயர் மணிராஜன்) "குழந்தாய்! நீயிதற்கு ஓருபாயம் செய்யாவிடில், இன்று எல்லோரும் உபவாசமிருந்து இறக்கவேண்டியிருக்கும்," என்று சொன்னார்.

அவன் சற்றுநேரம் யோசித்துப் பிறகு, "நான் விறகுதேடப் போகிறேன்; கோடரியொன்று கொடுங்கள்; மற்றொருவர் கயிற்றை யெடுத்துக்கொண்டு என்னுடன் வரட்டும்" என்று சொன்னான். ஆனால் அவனுடன் போக ஒருவரும் துணியவில்லை.

ஆபத்துக்காலத்தில் விட்டுக்கொடுக்கக்கூடாது என்று, மணிராஜன் தனது கச்சையை வரிந்துகட்டிக்கொண்டு, தனிமையாகவே, கோடரியைக் கையிலேந்தி விறகுதேடப் புறப்பட்டான்.

கரையின்மீதேறி, நாற்புறங்களிலும் திருஷ்டியைச் செலுத்திக் கவனத்துடன் பார்த்தான். எங்கும் வீடாவது குடிசையாவது புலப்படவில்லை; ஒரே வனமாயிருந்தது. அதிலும் பெரியவிருக்ஷங்கள் ஒன்றுமில்லை; சிறுசிறு கொடிகளும் செடிகளுமே யிருந்தன. அவைகளில் உபயோகப்படக்கூடிய விறகு ஒன்றுமில்லையென, மணிராஜன் அறிந்து, சரியான விறகைத்தேடுவதற்காக, ஆற்றின்கரையில் நெடுந்தூரம்போய்க் கடைசியில் ஒரு விருக்ஷத்தைக் கண்டான். அந்தமரத்திலிருந்து போதுமான விறகை வெட்டியெடுத்து, ஒரு கட்டாகக் கட்டினான், அதைக்

கொண்டுபோய்ச்சேர்ப்பது, மிகவும்கடினமாயிருந்தது. அவனுக்கு இப்படிப்பட்ட வேலைகளிற் பழக்கமில்லை. ஆனால் தொடங்கின காரியத்தை முடிக்காமல்விடுவது, மணிராஜனின் ஸ்வபாவமில்லை. கஷ்டப்பட்டாவது, விறகுகட்டைக் கொண்டுபோய்ச்சேர்க்க வேண்டுமென்று முடிவுசெய்தான்.

"விநெஹ: ஷு நஹ: ஷு நாவி..............".

'மறுபடியும்மறுபடியும் தடைகளால் அடிபட்டாலும் உத்தமர்கள் தொடங்கினகாரியத்தைப் பூர்த்திசெய்யாமல்விடமாட்டார்கள்' என்று "பர்த்திருஹரி" யென்ற கவி சொல்லியிருக்கிறார். மணிராஜன் உத்தமன் அல்லவா?. விறகுகட்டைச் சிறிதுநேரம் தூக்கிக் கொண்டுபோய்க் கீழேயிறக்கிச் சற்று இளைப்பாறி, மறுபடியும் அதைத் தூக்கிச் சுமந்துகொண்டுபோய்க்கொண்டிருந்தான். அதனால் மணிராஜன்வருவதற்குத் தாமதமேற்பட்டது. யாத்ரீகர்கள் மிகவும் கவலைப்பட்டார்கள். அவன் இன்னும் வந்துசேரவில்லையாதலால், அவனைப் புலி கொன்று தின்றுவிட்டதெனத் தீர்மானித்தார்கள். காட்டுமிருகங்களிடத்துண்டான பயத்தினால், அவர்களில் ஒருவனும்மணிராஜனைத்தேடிப்பார்க்கத் துணியவில்லை.

இதன்மத்தியில் சமுத்திரத்தில் பெரிய அலைகளும் கொந்தளிப்பும் ஏற்பட்டன. மாலுமிகள் புயல்வருமெனத் தீர்மானித்தார்கள். அப்போது கரையின்மேல் பெரியதோர் அலை மோதியது; கரை அநேக இடங்களில் இடிந்துவீழ்ந்தது. படகும் தரையில் மோதிச் சின்னபின்னமாய் உடைந்துபோய்விடுமெனப் பயந்து, மாலுமிகள் கட்டையவிழ்த்துவிட்டுப் படகை ஆற்றின்நடுவே கொண்டுபோனார்கள். எதிரிலிருந்த மணற்றரையில் அலைமோதியதால் கரையிலிருந்த அரிசி முதலான சமையல்வஸ்துக்களெல்லாம் அடித்துக்கொண்டுபோகப்பட்டன. யாத்ரீகர்களுடைய தீவினையால் மாலுமிகளும் சமர்த்தர்களில்லை. அவர்களால் படகை ஓரிடத்தில் நிறுத்தவும் முடியவில்லை. படகு தாம்பிரவர்ணிநதியின் நடுவே கொண்டுபோகப்பட்டது. பிரயாணிகளிற் சிலர்

மணிராஜனைக் காணோமேயெனத் துக்கித்தார்கள். மாலுமிகள் 'அவன் காட்டுநரிகளுக்கு இரையாகி இறந்துபோயிருப்பான்' என வருத்தத்துடன் சொன்னார்கள்.

ஆற்றின் நடுவேயிருந்து படகைத் திருப்பிக் கரைசேர்ப்பது முடியாதவேலையாயிருந்ததால், அதை வேறிடத்துக்குக் கொண்டு போகவேண்டுமென்று, மாலுமிகள் பிராணனைக் கையிற்பிடித்துக் கொண்டு, நெற்றியில் வியர்வைசுரக்கத் தண்டுகளை விலித்தார் கள். படகோவெனில், அலைகளின் வேகத்தால் மாலுமிகள் நினைத்த தற்கு முழுதும் மாறாக வடக்கே வெகுதூரம் இழுத்துக்கொண்டு போகப்பட்டது. அவர்கள் முயற்சி வீணேயாயிற்று.

அலையின்வேகங் குறைந்தவுடன், படகு தாம்பிரவர்ணிநதி யின் முகத்துவாரத்துக்கு வடக்கே யிருப்பதை மாலுமிகள் கண் டார்கள். மணிராஜனைக் காணாமல் யாத்திரிகர்கள் வருத்தப்பட்டும் அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அவர்களில் ஒருவரும் மணிராஜனது உறவினரில்லை. அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களே யாவார்கள். மாலுமிகளுக்கோ, படகைக்காப்பாற்றுவதில் நினைப்பே யன்றி, மணிராஜனைக்குறித்த எண்ணமே கிடையாது. யாத்திரிகர் கள் அவனைப் புலி கொன்று தின்றுவிட்டதென நிச்சயித்தார்கள். தங்களுக்கு உபகாரம்செய்ய முயன்றவனைக் காக்கவேண்டியது தங்கள்கடமையென்பது, அவர்களுக்குத் தோன்றவேயில்லை. தங்களுக்கு உதவிசெய்தவனுக்குச் சிறிதளவும் நன்றியின்றி வன வாசத்தையே அவர்கள் கொடுத்தார்கள். தைரியசாலியாதலால், அவன் எப்படியாவது பிழைத்துக்கொள்வானென விசுவாசமற்ற பாவிகளான அவர்கள் தீர்மானம் செய்தார்கள். பிரதியுபகார எண் ணமே அக்கொடியோர்களுக்குத் தோன்றவில்லைபோலும்.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமிசாஸ்த்ரி,

ஸ்ரீ :

மதிப்புரை.

தமிழ்ப் பேரகராதி:— சென்னைச் சருவகலாசங்க ஆதரவில் பிரசுரமாகும் இவ்வகராதியின் தொகுதி VI ல் பகுதி V வெளி வந்துள்ளது. இதில் வைராக்கியம் என்பது முதல் க்ஷௗளம் என்பதிறுதியாகவுள்ள சொற்களுக்கு வழக்கம்போல் மேற்கோள் விளக்கத்துடன் மிகத்தெளிவாகப் பொருளெழுதப்பட்டிருக்கிறது. பெரும்புகழ்விளைக்கும் இவ் வரும்பெறலகராதியின் வேலை இம்மட்டோடு முற்றுப்பெறுவதாகும். ஆகையால் இதனை நிறை வுறுத்தற்குரிய பெரியதொரு ஆங்கிலமுகவுரையும் மற்றும் பல விரிவான விவரங்களும் நன்ருக எழுதிச்சேர்க்கப்பெற்று விளங்கு கின்றன. இவ்வகராதிமூலமாகச் சென்னைப் பல்கலைக்கழகம் தமிழுலகுக் களித்த பேருபகாரத்தின் சிறப்பு அளவிடுந்தரத்த தன்று.

இத்தனிப் பகுதியின் விலை ரூ. 2. வேண்டுவோர், "Messrs. C. Coomaraswamy Naidu & Sons, George Town, Madras." என்ற விலாசத்திற் பெறலாம்.

தனிப்பாமஞ்சரி:—ஸ்ரீவானமாமலைமடத்து ஆஸ்தானவித்வான் தென்திருப்பேரை ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்காரவர்கள் இதனை ஆக்கி யோராவர். இவர் இருமொழிப்புலமையும் தமது குலதனமாகப் படைத்தவர்; கருவிலேயமைந்த கவித்திறம்வாய்ந்தவர். காளமேகப் புலவரேபோலச் சிலேடை திரிபு சித்திரம் கவினச் செய்யுளியற்றும் வன்மையால் இவரையும் அபிநவ காளமேகம் என்று தமிழுலகம் பாராட்டல் தகவுடைத்தென்னலாம். பொருட்சுவை தழுவி எதுகைமோனைத் தொடைநயம்பொலியச் சொற்பநேரத்திற் பற்பல பாக்களமைத்துக்காட்டுதல் இவர்க்கு விளையாடும் வித்தையாக

எளிதினியல்கின்றது. இத் தனிப்பாமஞ்சரியின் அருங்கவியனைத்தும் நகைச்சுவை ததும்புவனவாய்க் கற்போர்க்கு உவகையும் வியப்பும் ஒருங்குவிளைப்பன. இவற்றின் பொருளுணர்தற்கு இன்றியமையாத குறிப்புரையொன்றும் இப்புத்தகத்தில் எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளது.

இதன்விலை அணா 8. வேண்டுவோர், 'வித்வான் ஸ்ரீ. அனந்த கிருஷ்ணையங்காரவர்கள், தென்திருப்பேரை, (திருச்செந்தூர்த் தாலூகா)' என்ற விலாசத்திற் பெறலாம்.

ஈழகேசரி, ஆண்டுமடல்:—இஃது இப்பெயர்கொண்ட உயரிய வாரப்பத்திரிகையின் தாதுவருட அநுபந்தமாகும். இதில் வித்துவான் ஸ்ரீ. சி. கணேசையரவர்களின் ஐந்திணையாராய்ச்சியும், ஸ்ரீ. நவநீத கிருஷ்ணபாரதியவர்களின் ஆதிமருதி என்னும் இலக்கிய நாடகமும், பண்டித ஸ்ரீ இராஜையனாரவர்களின் மாயக்குதிரை என்னும் புனைகதையும், மற்றும் தக்க புலவர்களால் வரையப்பெற்ற எத்துணையோ பல அரிய தமிழ்க்கட்டுரைகளும் அடங்கியுள்ளன. அவற்றால் நூலறிவும் உலகியலறிவும் தமிழ்மக்களிடை நன்குபரவுமென்பது ஒருதலை. இங்ஙனம் இப்பத்திரிகையின் ஆசிரியர் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தாய்நாட்டு முன்னேற்றத்திற்கும் உரியமுறையில் அரிய தொண்டு ஆற்றுந்தன்மை பாராட்டற்பாலதே.

ஏறத்தாழ நூற்றைம்பதுபக்க அளவில் பலசித்திரப் படங்களுடன் கண்கவர்வனப்பின் அச்சிடப்பெற்ற இம்மடலின் விலை முதலிய விவரம், "தனலக்குமிபுத்தகசாலை, சுன்னாகம் (இலங்கை)" என்ற விலாசத்திற் றெரிந்துகொள்க.

தலைவன் மறுத்தல்.

322. என்னா ருயிர்க்குயி ராயெனை யாளு மெழின்மலர்வாழ்
பொன்னா ரடிதளிர் பூண்முலை மேரு பொருவிலிடை
மின்னா ரழற்கடத் தேக லரிதெம் வியனகர்சேய்த்
தொன்னார் புரமட்ட வெம்மான் சிராமலை யொண்ணுதலே. ()

பாங்கி தலைவனை உடன்படுத்தல்.

323. பொற்புக் கொருவரு மொவ்வாத வாரணி பூண்முலையாள்
கற்புத் தழற்கழற் பாலைசெந் தாமரைக் கான்மலராம்
அற்புத் தனையுறு மெம்மான் சிராமலை யார்கனக
வெற்புப் பொரும்புய னேயவ ணின்னெடு மேவிடினே. (௩)

தலைவன் போக்கு உடன்படுதல்.

324. நஞ்சார் தருமிடற் றெம்மான் சிராமலை நன்னுதலாய்
நெஞ்சா னினைக்கிற் சுடுங்கொடும் பாலையி னேரியசெம்
பஞ்சா ரடிமட மானைத்தம் மாவியிற் பற்றிலர்போல்
அஞ்சா தவட்கொடு போக நினைப்பது மற்புதமே. (௪)

பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்.

325. அம்பஞ் சனைவென்ற வெம்மான் சிராமலை யன்பரிந்நாள்
வம்பஞ்ச வீறு முலையண்ணங் கேநின் மலர்ப்பதங்கள்
செம்பஞ் சுறநொந்து வாடுமந் நீர்மையுந் தீத்திரளாற்
பம்புஞ் செறிபரற் பாலையு நாடிப் பதைத்தனரே. (௫)

---

322. பொன்னார் - திருமகள்போன்ற தலைவியினுடைய. பொரு இல் - ஒப்பில்லாத. மின் - மின்னல். ஆர் அழல் கடத்து - பொறுத்தற்கரிய வெப்பத்தையுடைய பாலைநிலத்தில். சேய்த்து - நெடுந்தூரத்தில் உள்ளது.

323. கற்புத்தீக்குப் பாலையானது செந்தாமரைமலரைப்போலக் குளிர்ச்சியுடையதாகும். அற்புத் தனை - அன்பாகிய தளை. சிராமலை ஆர்-சிராமலையில் உள்ள. மேவிடிற் செந்தாமரைமலராம்.

324. நெஞ்சால் நினைக்கிற் சுடும் பாலை: "உன்னு முளத்தையுந் தீக்குஞ் சுரம்" (343.) பாலையிற் கொடுபோக நினைப்பது.

325. அம்பு அஞ்சனை - ஐந்து அம்புகளையுடைய மன்மதனை. வம்பு - கச்சு. செம்பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு. பம்பும் - பாவிய.

தலைவி நாணழிபு இரங்கல்.

326. மறவாத காத லொடுமன்பர் பின்பு மறந்துமென்றும்
துறவாத நாணந் துறந்தவ ணேகத் துணிந்தவென்போல்
இறவாத வெம்பழி யெய்தப் பிறந்தவர் யாருலகிற்
பிறவாத வாழ்வு தருவோன் சிராமலைப் பெண்ணமுதே. (சு)

பாங்கி தலைவிக்குக் கற்புமேம்பாடு புகறல்.

327. பாணினுஞ்சொல்லினியோர்க்கணிநாணெனப்பனுவதென்
பூணினும் பொற்றிரு மங்கல நாண்மிகப் பொற்புறல்போல்
நாணினுங் கற்புச் சிறந்ததன் றேவிங்கு நாடரிய
சேணினுஞ் சிற்பர னெம்மான் சிராமலைச் சேயிழையே. (எ)

தலைவி ஒருப்பட்டெழுதல்.

328. நாளு மெனக்குத் துணையாகத் தோன்றிய நாண்வரம்பு
நீளு மலர்ச்சடை யெம்மான் சிராமலை நேயரன்பு
மூளு மயற்கட லெற்றிடப் போயது மொய்க்குமெழில்
ஆளு மலர்த்திரு வன்னபொன் னேயென் னதிசயமே. (அ)

பாங்கி சுரத்தியல்பு உரைத்துழித் தலைமகள் சொல்லல்.

329. தன்னை யுணர்த்தித் தனைப்போ லெனைச்செய்து தன்வசத்தே
என்னை நிறுத்திய வெம்மான் சிராமலை யேந்திழையாய்
அன்னை சினத்தினு மூரா ரலரினு மாகொடிதோ
மின்னை யுயிர்க்குந் தழற்பிழம் பாமந்த வெஞ்சுரமே. (கூ)

---

326. அவண் - அப்பாலைநிலத்தில். அன்பர் பின்பு ஏக. என்போற் பிறந்தவர் யார்?

327. பாண் - இசை. சொல் இனியோர்க்கு - மகளிர்க்கு. பூணினும் - எல்லா ஆபரணங்களுள்ளும்; நாணிற் கற்புச் சிறந்தது; "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினும், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (தொல். களவு. சூ. 22); "தாயிற் சிறந்தன்று நாண்டைய லாருக்கந் நாண்டகைசால், வேயிற் சிறந்தமென் றோளிதிண் கற்பின் விழுமிதன்று" (திருச்சிற். 204.) இங்கும் - இவ்வுலகத்தும். இங்கும் சேணினும் கற்புச் சிறந்ததன்றோ?

328. நாணாகிய வரம்பு மயற்கடல் எற்றிடப் போயது.

329. வெஞ்சுரம் கொடிதோ?

பாங்கி கையடை கொடுத்தல்.

330. சேடார் தருமுகில் போலொளி வாய்ந்தளி செவ்வழிதேர்
ஏடார் குழல்பெய் தொழிமுகில் போனிற மேய்ந்திடினும்
தோடார் தருசெவி யெம்மான் சிராமலைத் தோகையைச்சீர்
நீடார் தரவின்று போலென்றுங் காத்தரு ணீமன்னனே. (கo)

வைகிருள் விடுத்தல்.

331. மின்னு ரலரன்னை யூரிடர் தீரும் விதமுரைத்துன்
பின்னுக வெய்துவன் யாவருந் துஞ்சுமிப் பேரிருள்வாய்
மன்னு மகிழ்வொடு மெம்மான் சிராமலை வாழ்ந்தருளும்
என்னு ரமுதனை யாளையன் பாற்கொண் டெழுந்தருளே. (கக)

அவன் சுரத்துய்த்தல்.

332. சந்தார் பொழிலுந் தடமலர் வாவியுஞ் சாலைகளும்
பந்தார் முலையுமை பாகன் சிராமலைப் பால்வளரும்
கொந்தார் குழன்மலர்க் கோமள மேகண் குளிரக்கண்டு
செந்தா மரைப்பத நோவாம னீமெல்லச் சென்றருளே. (கஉ)

---

330. சேடு - பெருமை. அளி - வண்டு. அளி செவ்வழியைத் தேருகின்ற குழல்; தேர்தல் - ஆராய்தல். பெய்து ஒழி முகில் - நீர்பெய்து வெளுத்த மேகம். தோடார்தரு செவி: "தோடுடைய செவியன்" (தே.) குழல்........ ஏய்ந்திடினும் என்றது குழல் விளர்த்து முதுமைப் பருவத்தை அடைந்தாலும் என்றபடி. "மாலோன் பதியை யரன்பதி தேடி வரினுமழைக், காலோதி வாணி நிறமே புகினுங் கருத்தொன்றதாய், வேலோ னெனவந்த விக்ரம சோழன் வியன்சிலம்பிற், சேலோடுங் கண்ணியை யென்நாளுங் காக்குந் திறமுனக்கே" (தனிப்பாடல்) என்பதன் கருத்தை இச்செய்யுள் ஒருவாறு தழுவியது.

331. மின்னுருடைய அலரும். அன்னை இடரும் ஊரா ரிடரும். துஞ்சும் - உணர்வு மறந்து தூங்கும். மன்னு: விளி. அன்பால் - அன்புடன்.

332. சந்து - சந்தனமரம். கொந்து - பூங்கொத்து. பொழில் முதலியவற்றைக் கண்டு.

தலைமகன் தலைமகள் அசைவுகண் டிருத்தல்.

333. காரார் தருமிடற் றெம்மான் சிராமலைக் காரிகைநின்
சீரா ரடிமலர் சேப்புற வாண்முகச் செய்யகஞ்சம்
தாரார் தரள முகிழ்த்தென வேர்த்தது சாலவிந்த
ஏரார் பொழிலிற் சுரமாறு மட்டு மிருந்தருளே. (கங)

உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந் துரைத்தல்.

334. கான்செய்த கொன்றைய னெம்பெரு மான்றென் கயிலைவளர்
கூன்செய்த வாணுதல் பாதந்தை வந்திக் கொடுஞ்சுரத்தின்
தேன்செய்த மாமலர் கூந்தலிற் சேர்த்தணி செய்தமையால்
யான்செய்த மாதவஞ் செய்தா ருலகினில் யார்நெஞ்சமே. ()

கண்டோர் அயிர்த்தல்.

335. மாதாரும் பாகத்த னெம்மான் சிராமலை வாழ்பவரோ
போதாரும் பூந்தரு நீழலில் வாழ்ந்திடும் புண்ணியரோ
தாதாருந் தாரணி விஞ்சைய ரோவன்றித் தாமெவரோ
தீதாருந் தீச்சுரத் தேநடந் திவ்வழிச் செல்பவரே. (கரு)

கண்டோர் காதலின் விலக்கல்.

336. ஒருமா னிடத்துறை யெம்மான் சிராமலை யூரினின்றும்
திருமா லெனவரு வீர்நகர் தானின்னுஞ் சேய்த்திருள்சீர்
பெருமா னலைகட லாழ்ந்தா னெமது பிறங்கலின்வாய்க்
கருமா வுறுதசை யார்ந்துறை வீரிந்தக் கங்குலிலே. (கசு)

---

333. காரிகை - விளி. சேப்புற - சிவப்ப. சால வேர்த்தது. சுரம் - சுரத்தின் வெம்மை.

334. கான் - நறுமணம். கூன் - வளைவு. தைவந்து - தடவி. மலரைக் கூந்தலிற் சேர்த்து.

335. தாது - பூந்தாது. விஞ்சையர் - வித்தியாதரர்.

336. ஒரு மான் - உமாதேவியார். திரு மாலென - திருவையும் மாலையும் போல. சேய்த்து - நெடுந்தூரத்திலுள்ளது. இருள் தீர்தற்குக் காரணமாகிய பெருமான்-சூரியன். பிறங்கல் - மலை. கருமா-பன்றி; "ஏனமெல்லூன், தீயற் கறியுந் தினைமூ ரலுமெஞ் சிறுகுடில்வாய், நேயத் திவண்மிசைந் தேகி னென் னுகு நெடுந்தகையே" திருவேங்கைக். 143.

கண்டோர் தம்பதி அணிமை சாற்றல்.

337. வேண்டுவ யாவுந் தருவோன் சிராமலை மேவுமன்ப
ஈண்டுறு குன்றினை நீர்கடந் தேகி னிறைப்பொழுதில்
ஆண்டொளிர் சோலையும் வாவியு மாளிகை யார்நகரும்
காண்டொறு மோகையுள் ளத்துறத் தோன்றுநுங் கண்களுக்கே. (கஎ)

தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்கு உணர்த்தல்.

338. கோங்கரும் பாமுலை பாகன் சிராமலைக் கொம்பனையாய்
தாங்கரும் பாலை தணந்தனந் தேமலர்த் தண்பொழிலும்
பூங்கரும் பாரும் பணைகளும் வாவியும் பொற்பொடுமெய்ப்
பாங்கருஞ் சூழ்தரத் தோன்றுநம் மாணகர் பாரிதுவே. (கஅ)

உஉ. கற்பொடு புணர்ந்த கவ்வை.

செவிலி பாங்கியை வினுதல்.

339. அன்னையு மத்தனு மாவோன் சிராமலைக் கன்பிலர்போல்
என்னையும் விட்டிங் கிருளைய ரேங்கிட வீன்றெடுத்தாள்
தன்னையும் விட்டுயிர் போற்பிரி யாத தனித்துணையாம்
நின்னையும் விட்டெங்ங னேகின னெம்மனை நேரிழையே. (க)

பாங்கி செவிலிக் குணர்த்தல்.

340. திருநா மகட்கன்பர் தம்மான் சிராமலைச் சேயிழையாள்
ஒருநா ளிடைவண்ட லாடிடத் தோரிறை யுற்றனைசீர்
மருநாண் மலர்த்தொடை யீந்திட வாங்கி மகிழ்ந்துமைசேர்
இருநாண் மலர்விழி தானிமை யாம விருந்தனளே. (உ)

---

337. வேண்டுவ யாவுந் தருவோன்: "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" (தே.) தலைவியையும் உளப்படுத்திக் கூறினமையின் நீரென்றார். இறை - கையிறையளவு. ஆண்டு - அவ்விடம்.

338. பணைகள் - வயல்கள். நகர் தோன்றும்; இதனைப் பார்.

339. இருளையர் - தோழிமார்கள். எம்மனையென்றது தலைவியை.

340. திருமகட்கு நாமகட்கு அன்பர் - திருமாலும் பிரமதேவரும். தம்மான் - தலைவர். வண்டல் - விளையாட்டு. அனை: விளி. மை சேர் - அஞ்சனம் சேர்ந்த.

பாங்கியின் உணர்ந்த செவிலி தேற்றுவோர்க்கு எதிரழிந்து மொழிதல்.

341. தானே யெனைத்தடுத் தாண்டோன் சிராமலைத் தாழ்குழலீர்
ஊனே யுருகி யுணமுலை யூட்டி யுவந்தளித்த
யானேத முற்று வருந்தவொ ராற்றி லெடுத்தபெரு
மானே துணையென மானேகும் வாறென் வழங்குமினே. (௩)

செவிலி தன் அறிவின்மைதன்னை நொந்துரைத்தல்.

342. கன்ன லனமொழி பாகன் சிராமலைக் காரிகையாள்
னென்ன லெனைமண வண்டலம் பாவையை நீடுவகை
மன்ன வணங்குவித் தூர்க்கனுப் பாயென வாய்மலர்ந்தாள்
இன்ன துணர்கிலன் போய்வர லாமென் றியம்பினனே. (௪)

செவிலி தெய்வம் வாழ்த்தல்.

343. என்னு ளிருந்தரு ளெம்மான் சிராமலை யெய்ந்தெமரைத்
துன்னு மிடர்தவிர்த் தாளணங் கேயொரு தோன்றலின்பின்
உன்னு முளத்தையுந் தீக்குஞ் சுரத்தக லொண்டொடியைப்
பின்னு மெனதிடஞ் சேர்க்கின் மகிழ்பலி பெய்குவனே. (௫)

செவிலி நற்றாய்க்கு அறத்தோடு நிற்றல்.

344. வாமா மறையென வூர்வோன் சிராமலை வாணுதலாய்
தேமா மலர்த்தடம் வீழத் தழுவித் தினைத்தெடுத்த
கோமா னெடுமட மானுள்சென் றேகினள் கூறுநிதி
நாமா தரித்துப் பிறர்மணம் வேட்ட நலனுணர்ந்தே. (௬)

---

341. யான் ஏதமுற்று; ஏதம் - துன்பம். ஓராற்றில் - ஒருநதியில். வாறு - விதம்; "வல்லா னுலாவந்த வாறென்ன" (சோக்கநாதருலா, 168); புனறருபுணர்ச்சியைத் தெரிவித்தவாறு. இந்த மான் ஒரு பெருமான் துணையென ஏகினளென்றது ஒரு நயம்.

342. வண்டலம்பாவை - விளையாட்டிற்குரிய பாவை.

343. அணங்கே - தெய்வமே. உன்னும் உளத்தையும் தீக்கும் சுரம்: "நெஞ்சா னினைக்கிற் சுடுங்கொடும் பாலை" (324) என்றார் முன்னும்; "வேனிலே யல்லதோர், இருதுவே றின்மையா லெரிசுடர்க் கடவுளும், கரு தின்வே முள்ளமுங் காணின்வே நயனமும்" கம்ப. தாடகைவதை. 5.

344. மறையை வாமாவென ஊர்வோன்; வாமா - குதிரை. பிறர் மணம்-அயலாருடைய மணத்தை. பிறர் கொடுக்கும் பரிசப்பொருளை விரும்பி அவருக்கு மணம்செய்துகொடுக்க விரும்பியதை உணர்ந்து சென்றாள்.

நற்ருய் பாங்கிதன்னேடு புலம்பல்.

345. வெறியார் கடுக்கைய னெம்மான் சிராமலை மெல்லியலாய்
நெறியார் மணமுன்பு செய்குவ மேயுண்மை நீமொழிந்தாற்
சிறியாள் சுரத்திடை யேக நகைக்கிடஞ் செய்வித்தொன்றும்
அறியா தவளென வெம்முடன் கூடி யயர்வதென்னே. (எ)

நற்ருய் பாங்கியர்தம்மோடு புலம்பல்.

346. மாயா மலந்தவிர்த் தாள்வோன் சிராமலை வாணுதலாள்
சேயா மொருவள்ளல் பின்னே மலரடி சேப்பவன்பால்
ஓயா வருள்பெறு மாயத் துளீரென்ன வோதுவம்யாம்
காயா ரழற்சுரஞ் சென்ரு ணமக்கிடர் காட்டியின்றே. (அ)

நற்ருய் அயலார்தம்மோடு புலம்பல்.

347. போற்ருர் புரங்கள் பொடித்தார் சிராமலைப் பூண்முலையைக்
கீற்ருர் பிறைநுத லாளை யெனது கிளிமொழியை
மாற்ருர் வசையுரை மாறிட மீண்டு வருதல்கண்டால்
ஆற்ரு வருந்துய ராறு மதுவன்றி யாறுவதே. (கூ)

நற்ருய் தலைமகள் பயிலிடந்தன்னேடு புலம்பல்.

348. ஊனே யுயிர்நிக ரெம்மான் சிராமலை யூடுலவு
மானே பசிய கிளியே யியலின் மயிலினமே
கானே மலர்த்தட மேமல ரார்பொழில் காணமது
தேனே நிகர்மொழி யாளென்று மேவுவள் செப்புமினே. (கo)

---

345. வெறி - நறுமணம். உண்மையை நீமொழிந்தால் மணம் முன்பு செய்திருப்பேமே; மணம் - கல்யாணத்தை. "போரில் நெருப்பை வைத்து ஊரிலுங் கூகூவென்றல்" என்னும் பழமொழியை இச்செய்யுள் நினைப்பிக்கின்றது.

346. சேய் - முருகக்கடவுள். அன்பினல் அருளைப் பெறும்; "அருளென்னு மன்பீன் குழவி" (குறள், 757.) காய் ஆர் - கொதித்தல் நிரம்பிய.

347. ஆறுவதே - ஆறுவதற்கு வழியுண்டா?

348. ஊன் ஏய் உயிர். இயலினையுடைய. கானே - காடே. பொழில் கள்.

நிமித்தம் போற்றல்.

349. பாயச வூனொடு பாயச மாரும் பலியளிப்பேன்
சேய சடாடவி யெம்மான் சிராமலைச் சேய்நிகராய்
நேய சலாபம் புரிந்துடன் மேவு நிருபனொடும்
வாயச மேயிவ ணெம்மகண் மீண்டு வரக்கரையே. (௧௧)

நற்றாய் சுரந்தணிவித்தல்.

350. காலையுங் காய்ந்தெழு முச்சியு மேத்திக் கரங்குவித்து
மாலையும் போற்றுவ னெம்மான் சிராமலை மன்னலர்சேர்
பாலையுந் தாமரை யோடையும் வாவியும் பன்மலர்தோய்
சோலையும் போலவென் மானபோம் வழிசெய் சுடரவனே. ()

நற்றாய் தன்மகள் மென்மைத்தன்மைக் கிரங்கல்.

351. எங்கு நிறைந்தரு ளெம்மான் சிராமலை யேந்திழைசீர்
பொங்கு மலர்ப்பதம் பூமேன் மிதிக்கிற் பொருதயர்வாள்
கங்குலி னும்பகல் போற்றெறு பாலையிற் கல்லழன்மேல்
அங்கு வருந்தி நடந்திட வோதவ மாற்றினனே. (௧௩)

நற்றாய் தன்மகள் இளமைத்தன்மைக்கு உளமெலிந் திரங்கல்.

352. பெண்பா லமர்ந்தரு ளெம்மான் சிராமலைப் பேதையன்பால்
உண்பா யெனவமு தூட்டவொர் பாவைக் குணைமயினுற்
கண்பாய் புனலோ டணையமைத் தூட்டெனக் காட்டுமவள்
பண்பா யொருவ னுடன்செல வந்ததெப் பான்மையதே. (௧௪)

---

349. பாய் அச ஊனொடு - பாய்ந்துசெல்கின்ற ஆட்டின் தசையோடு. பாயசம்=பாயஸம் - ஒருவகை இனிய உணவு. சேய - சிவந்த. சேய் நிகராய் - முருகக்கடவுளை ஒத்து. சலாபம் - சல்லாபம். வாயசமே - காக்கையே. இவண் - இவ்விடத்தே.

350. மன்னலர் - விரும்பித்தங்காதவர். பாலையும் - பாலைநிலத்தையும்; உம்மை, இழிவுசிறப்பு. சுடரவனே - சூரியனே; இவன் பாலைநிலத்திற்கு உரிய தெய்வம். வழிசெய் - வழியைச் செய்வாயாக.

351. ஏந்திழை அயர்வாள். கல் - பருக்கைக் கற்கள்.

352. ஓர் பாவைக்கு அமுதூட்ட. வந்தது - வந்த விருப்பம். எப்பான்மையது - எத்தன்மையது.

விசேடக்குறிப்பு:—இதனால் நாய்ச்சியார் பெரியபிராட்டியாரோடு கூடிய எம்பெருமான் திருமருங்கி லெழுந்தருளியிராதபோது பெரியபிராட்டியாருடைய புருஷகாரமும் அவ்வெம்பெருமானது ரட்சணகாரியமும் சபலமாகாதென்பது சூசிக்கப்படுகிறது. நாயகன் எழில்திருமேனி தனக் கியல்பாயமைந்த மைவண்ணத்தைவிட்டுப் பசுமைநிறத்தோடுகூடிய சுவர்ணவர்ணத்தை மருவிப் பிறிதொருவண்ணத்தைப் பெற்றதென்கையாலே சர்வேச்சுரன் சுவாதந்திரியகுணத்தைவிட்டுப் பொறுமையையும் கருணையையும் பொருந்தி அடியார்களை அநுக்கிரகித்தருளுகிறானென்ற விடயம் சூசிக்கப்பட்டது. திருமேனி லக்ஷணையாகத் திருவுள்ளத்தையும் சரீரியான சர்வேச்சுரனையும் குறிப்பதாகக்கொண்டு இவ்வாறு கொள்ளப்பட்டது. உள்ளவாறே பொருள் கூறலு மொன்று. திருமேனியே தன்னை உபாயமாக நினைக்கின்றவர்களுக்கு இன்பம்பயக்குமென்பதை அமுதனாரும், "கையிற் கனியெனக் கண்ணனைக் காட்டித் தரினுமுன்றன் - மெய்யிற் பிறங்கிய சீரன்றி வேண்டிலன்" என விளக்கியருளினர். அறுகு - தூர்வை. இளம்புல்; பதம்; சதபர்விகையென்ற பெயரும் இதற்குண்டு. கோரோசனை என்பது மேலான பசுவினிடத்துண்டாகும் ஒரு மருந்துப்பொருள்; வாசனைப்பொருளுமாம். பச்சைவண்ணத்துக்கும் பொன்வண்ணத்துக்கும் பல பிரசித்தமான உபமானப்பொருள்க ளிருப்பவும் இவற்றை இங்கு எடுத்துக்கூறியது,

> "அறுகம்புல் வாதபித்த மையமோ டீளை
> சிறுகவறுக் கும்பின்னுஞ் செப்பில் - அறிவுதரும்
> கண்ணோ யொடுதலைநோய் கண்புகைச்சல் ரத்தபித்தம்
> உண்ணோ யொழிக்கு முரை"

என்றும்,

> "நீரிழிவு மேகசுர நீங்காக் கனல்வேகம்
> கூரியவுன் மாதங் குழந்தைகணோய்—பாரகபம்
> வீறும் மசூரியும்போம் வேதந் தனிலிரண்டாய்க்
> கூறுங்கோ ரோசனைகட் கு"

என்றும் பதார்த்தகுணசிந்தாமணியார் கூறியபடி இவ்விரண்டு திரவியங்களும் உளத்திலும் உடலிலுமுண்டாகும் ஆதிவியாதியைப் போக்கி அறிவையும் ஆகத்தையும் விருத்திசெய்யுமாறுபோல இவ்விருவகையான காந்திகளும் அபராதிகள்பக்கலிலே எம்பெருமானுக் குண்டாகும் சீற்றத்தை மாற்றிக் குளிரக் கடாக்ஷிக்கும்படி காருண்ய தாட்சணியங்களை விருத்திசெய்யும் மகிமையுடையவை யென்பதைக் கருதியேயாம். அனை - அண்மைவிளி; இது அன்னையின்விகாரம். நினவென்பதன் அகரம் ஆறனுருபு. தனு - திருமேனி.

உரு - திருமேனி. நிழல் - காந்தி. நறுவிய - நறுமையென்னும் பண்படியாகப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம்; இங்கு அழகியவென்னும் பொருளது. கயில் - பிடரி; இது சினையாகுபெயராய்க் கழுத்தைக் குறித்தது. இயல் - சாயல்; நாயகன் என்றதனால் துட்டநிக்கிரக சிட்டபரிபாலனஞ் செய்பவனெனக் கொள்ளவேண்டியதாயிற்று. மங்கலமாம் வாழ்க்கையென்றது நித்தியசோபனத்தோடு கூடிய வைகுந்தவான்பெரும்போகத்தை.

இப்பாட்டுக் குறிப்பினால் ஒருபொருள் சிறப்புறத்தோன்றுதலாலே உதாரமென்னுங் குணமுடையதாம்.

அணி:—எம்பெருமான் திருமேனி நாய்ச்சியார் பெரியபிராட்டியார் திருமேனியொளியினாலே தன் மைவண்ணம் மறைபட்டு மயிலின் கயில் வண்ணம்பெற்றதாகச் சொல்லப்பட்டிருத்தலாலே பிறிதின்குணம்பெறலணியாம். "ஒருபொரு டன்னியல் பொழிந்து பிறிதின், குணம்பெறல் பிறிதின் குணம்பெற லணியே" என்பர் சந்திராலோகநூலார். வடநூலார் தத்குணாலங்காரமென்பர். (உஉ)

23. அன்னைநின் னொடுபொன் னொடுமுறை யிறைவ
னாகுமா ராத்தியன் றன்னை
முன்னைமா மறையாம் மலரினா னன்கு
முறையினா ராதனை புரிந்து
மன்னிய மகிமை வாய்ந்தவா னவரும்
மனுமுத லானமா னவரும்
பன்னரும் புகழம் மன்னருந் தமது
பதிபுரந் தனர்பல பகலே.

பதவுரை:—அன்னை - தாயே; நின்னொடு - தேவரீரோடுகூட; பொன்னொடும் உறை - பெரியபிராட்டியாரோடும்வங் தெழுந்தருளியிருக்கிற; இறைவன் ஆம் - நாதனாகிய; ஆராத்தியன்றன்னை - அர்ச்சிக்கத்தக்கவனாகிய திருவரங்கமன்னனாரை; முன்னை - பிரமலோகத்திலும், திருவயோத்தியிலும், திருவரங்கத்திலு மெழுந்தருளியிருக்கும்பொழுது; மன்னிய - நிலைபெற்ற; மகிமைவாய்ந்த - பெருமை பொருந்திய; வானவரும் - பிரமா முதலிய தேவர்களும்; மனுமுதலான மானவரும் - வைவச்சுதமனுமுதல் சக்கிரவர்த்தித்திருமகன்வரையுள்ள அம்மனுவின்வமிசத்திற்பிறந்த அரசர்களும்; பன் அரும் புகழ் அ மன்னரும் - சொல்லுதற்கருமையான பெரும்புகழ்வாய்ந்த பிரசித்திபெற்ற அந்தத் தன்மவன்மன் முதலிய சோளதேசத்தரசர் முதலிய

வர்களும்; முறையின் - கிரமப்படி; மாமறை ஆம் மலரினல் - பெருமை மருவிய புருஷசூக்தம்முதலிய வேதமந்திரங்களாலும், ஆராதனயோக்ய மான புட்பங்களாலும்; நன்கு ஆராதனை புரிந்து - நன்ருக ஆராதித்து; பலபகல் - சிரகாலம்; தமது பதி - தம்முடைய ராஜ்யங்களை; புரந்தனர் - பரிபாலனஞ்செய்தார்கள். எ-று. ஏ அசை.

கருத்து:—நாய்ச்சியாரே! தேவரீரோடு பெரியபிராட்டியாரோடும் வந்து ஏகாசனத்தி லெழுந்தருளியிருக்கிற ஆராதிக்கத்தக்கவனுகிய சர்வேச் சுரனை முற்காலத்திலே வானவரும் மானவரும் மன்னவரும் முறைப்படி மந்திரபுஷ்பங்களாலே ஆராதனைசெய்து வெகுகாலம் தங்கள் தங்களுடைய ஸ்தானங்களிலிருந்து தமது ராஜ்யங்களைப் பரிபாலித்துவந்தனர். இப்பொழுதோ அந்தத் திருவரங்கமன்னனுரோடுகூடி யெழுந்தருளியிருக்கிற தேவரீரைப் பணிந்து யாவரும் சர்வாபீஷ்டங்களையும் பெற்று எங்கும் திருவருள்பெற் றின்புறுகிருர்களென்பதாம்.

விசேடக்குறிப்பு:—அன்னே! அண்மைவிளி. ஆராத்தியன் - பூசிக்கத் தக்கவன். முன்னே - முந்தியகாலங்கள்; இவற்றைப் பதவுரையிலேயே விளக்கினேம். முறை - பிரமலோகம் முதலிய மூன்றிடங்களிலும் கிரமப்படி என்ருவது ஆராதனக்கிரமப்படி என்ருவது கொள்ளலாம். மாமறையென் றது, அபௌருஷேயமாய், நித்தியமாய், ஸத்தியமாய், எல்லாப்பொருள்களை யும் அறிந்ததாய் அறிவிப்பதாயிருக்கிற பெருமையோடு கூடிய வேதத்தி லுள்ள புருடசூக்தாதி மந்திரங்களை. மறையாம் மலர் - மந்திரபுட்பங்கள்; இது முன் விளக்கப்பட்டது. முன்னே என்ற குறிப்பினல் இப்பொழுது தேவரீரையே பணிந்து யாவரும் சர்வாபீஷ்டங்களையும் பெறுகின்ருர்க ளென்று விரித்துப் பொருள்கூறப்பட்டது. பிரமாதிதேவர்களும் மனுமுதலிய வர்களும், தன்மவன்மா தொடக்கமானவர்களும் தேவரீர்நாதனை யாரா தித்து அபீஷ்டசித்தியையடைந்தனரென்பதை ஸ்ரீரங்கம் ஸ்தலபுராணம் ஸ்ரீராமாயணம் முதலியவைகள் விரிவாக விளம்புகின்றன.

இப்பாட்டு, சொல்லின்கண்ணும் பொருளின்கண்ணும் சுவையுடைய தாகத் தொடுக்கப்படுதலில் இன்பமென்னுங் குணவணியதாம். இத னிலக்கணம் முன்சொல்லப்பட்டது. (உரு)

24. ஈரமே புலரா விரும்பிழை யிழைத்த
வீவரையு மளித்தரு ளுதனின்
பாரமே யென்று திருவரங் கருக்குப்
பரிவொடு பகர்ந்திடு மளவில்

வாரமே யவன்றன் மற்றொரு பானீ
வதிந்திலை யெனிற்பெரும் பாலும்
ஆரமே யனைய திருநகை முகத்தா
யவன்பரா முகஞ்செயு மன்றே.

பதவுரை:—ஆரமே யனைய திருநகைமுகத்தாய்! - முத்தின்பத்தியை யொத்த அழகிய குறுமுறுவலோடு கூடிய திருமுகமண்டலத்தையுடைய தாயே!; நீ - தேவரீர்; திரு - பெரியபிராட்டியார்; அரங்கருக்கு - திருவரங்க மன்னனரிடத்தில்; பரிவொடு - பிரீதியோடு; ஈரமே புலரா இரும்பிழை யிழைத்த இவரையும் - (மறக்கவொண்ணாதபடி) சமீபகாலத்தில் மகாபராதங்களைச்செய்த இந்தச் சேதநர்களையும்; அளித்தருளுதல் - கிருபையாலே காப்பாற்றுதல்;- நின் பாரமேயென்று - ரட்சகராயிருக்கிற தேவரீரது கடமையாகுமென்று; பகர்ந்திடும் அளவில் - விண்ணப்பஞ்செய்யுங்காலையில்; அவன்றன் மற்றொருபால் - அந்த எம்பெருமானுடைய மற்றொரு பக்கத்தில்; வாரம்மேய் - உரிமைவாய்ந்து; வதிந்திலையெனில் - எழுந்தருளியிராவிட்டால்; அவன் - அந்தச் சர்வேச்சுரன்; பெரும்பாலும் - மிகவும்; பராமுகஞ்செயு மன்றே - திருமுகத்தை மாறவைத்தருளுவனல்லவா எ-று.

கருத்து:—நாய்ச்சியார் பக்கத்திலெழுந்தருளியிராவிட்டால் பெரிய பிராட்டியாரது புருஷகாரத்துவமும் சர்வேச்சுரனது சர்வரட்சகத்துவமும் ஜீவியாதென்பது.

விசேடக்குறிப்பு:—ஈரமேபுலரா இரும்பிழை - மறக்கவொண்ணாதபடி சமீபகாலத்திற் செய்த பெரிய குற்றம். உம் - இழிவுசிறப்புப்பொருளது. வாரம் என்பது எம்பெருமானுக்கு வல்லபையாயிருக்கும்உரிமை, வாற்சலியம், அடியார்பக்கலுள்ள பட்சபாதமுமாம். ஆரம் - முத்து; அதன் வரிசைக்கு ஆகுபெயர். நகை - தந்தம்; முறுவலுமாம். முகம் மாறவைத்தல் - பிரார்த்தனைக் குடம்படாமை. செயும்—செய்யுமென்னும்வாய்பாட்டுவினைமுற்று. அன்று ஏ என்று பிரித்து அசையாகவும் கொள்ளலாம். பரிவொடு பகர்ந்திடு மளவிலென்றுங் கூட்டிக்கொள்ளலாம். பரிவு - பக்குவம்; வருத்தமுமாம்.

இப்பாட்டு, கவியாற் கருதப்பட்டபொருள் வெளிப்படையாய் விரைவிற் புலப்படுதலுடைமையில் தெளிவென்னுங் குணமுடையது.

அணி:—பெரியபிராட்டியாருடைய புருஷகாரம் பலிப்பதாகிய காரியம் முற்றுப்பெறுதற்குத்திருவரங்கமன்னனாது மற்றொருபக்கத்தில் நாய்ச்சியா ரெழுந்தருளியிருத்தல் ஊகிக்கப்பட்டிருத்தலால் இப்பாட்டு உய்த்துணர வைப்பணியாம். "இவ்வா றாயினீ துறு மெனவொரு, காரிய முடிவைக் கருத லுய்த் துணர்வே" என்பர் சந்திராலோகநூலார். இதனை வடநூலார் சம்பாவனலங்காரமென்பர். (உச)

25. என்னையே யின்பச் சுவைக்குத வியதா
யிருப்பதுங் குணங்களால் வணங்கும்
அன்பரின் பிழையை யொழிப்பதுமாகி
யவிருநின் னன்னுத லொசிவே
முன்வினைப் பயனீ வதில்விருப் புமிகும்
முதல்வனின் சுதந்திரத் துவத்துத்
துன்னிய துரபி மானத்தின் மருமந்
துளைப்பதின் முதற்கரு வியதாம்.

பதவுரை:—என்னையே - எனது தாயே; இன்பச் சுவைக்கு - போகரசத்திற்கு; உதவியதாயிருப்பதும்-அநுகூலமாகவுள்ளதும்; குணங்களால் - விவித விலாசரூபமான குணங்களினாலே; வணங்கும் - அடிபணியும்; அன்பரின் பிழையை - அடியார்களின் அபராதங்களை; ஒழிப்பதும் - போக்குவதும்; ஆகி - ஆய்; அவிரும் - விளங்கும்; நின் - தேவரீரது; நல் நுதல் - நல்ல புருவத்தினது; ஒசிவே - அசைவுதானே; முன்வினைப்பயன்ஈவதில் - பூர்வகன்ம பலங்களைக் கொடுக்கும்விஷயத்தில்; விருப்புமிகும் - ஆசையதிகரிக்கின்ற; முதல்வனின் - நாயகனாகிய திருவரங்கமன்னனாரது; சுதந்திரத்துவத்து - சுவாதந்திரியத்திலே வைத்துள்ள; துன்னிய - மிகுந்த; துரபிமானத்தின் - தகுதியல்லாத பிரீதியினது; மருமம் - உயிர்நிலையை; துளைப்பதில் - பிளக்கும் விஷயத்திலே; முதற்கருவியதாம் - முக்கியசாதனமாகுகின்றது எ-று.

கருத்து:—நாய்ச்சியாரது புருவங்களினசைவே அவரவர்களுடைய கருமாநுகுணமாக நிக்கிரகாநுக்கிரகங்களைச்செய்தலிற் போர விருப்புடைய சர்வேச்சுரனது சுவாதந்திரியத்தை மாற்றி அபராதிகளையும் அநுக்கிரக்கும் படிசெய்யவல்லதென்பது.

விசேடக்குறிப்பு:—என் அன்னை - என்னை. ஏ விளியுருபு. இன்பச்சுவை - போகரசம். குணங்கள் என்றது இங்குப் புருவங்களின் பலவகையான தொழிற்பண்புகளை; இவைகள் திருவுள்ளக்கருத்துக்களைக் குறித்துரைப்பன ஆகும். நாய்ச்சியாரது நன்னுதலொசிவு, பெரியபிராட்டியாரின் இன்சொற்களைக் காட்டிலும் காரியஞ்செய்யவல்லதென்பது சூசிக்கப்பட்டது. அன்பரின் பிழையை யொழித்தலாவது - திருப்புருவத்தின் பலவகையான சிங்கார சேட்டிதங்களாலே அடியார்களின் அபராதங்களையெல்லாம் எம்பெருமான் மறக்கும்படிசெய்வது.

மூவினமெய்களும் ஆதிதொடங்கி அந்தம்வரை சமமாகத் தொடுக்கப்பட்டிருத்தலால் இப்பாட்டு, சமநிலையென்னுங் குணவணியதாம். (உரு)

26. அன்னையே மன்னு மரங்கமா மாகத்
தவிர்திரு மின்னமர் மாலாந்
தென்னையேய் மாலின் கருணைமா மழையாற்
றிகழ்வதுங் கொடுநர கென்னுங்
கொன்னையே விளைவெவ் விடமொழிப் பதுமாங்
குளிர்சுதா சிந்துவா முன்னைப்
பொன்னையேய் புனிதர் படிந்துவல் விரைவிற்
போக்குகின் றனர்மும்மை வெம்மை.

பதவுரை:—அன்னையே - தாயே; மன்னும் - நிலைபெற்ற; அரங்கம் ஆம் மாகத்து - வாசத்தானமான ஆகாயத்திலே; அவிர் - விளங்குகின்ற; திரு - பெரியபிராட்டியாகிய; மின் - மின்னலை; அமர் - பொருந்திய; மாலாம் - திருமாலாகிய; தென்னையேய் - கருமைவாய்ந்த; மாலின் - மேகத்தினது; கருணைமாமழையால்-கிருபையாகிய பெருமைபொருந்திய வருஷத்தினாலே; திகழ்வதும் - பெருகிவிளங்குவதும்; கொடுநரகென்னும் - கொடுமையான துர்க்கதியென்று சொல்லப்படுகின்ற; கொன்னையே விளை - பயத்தையேயுண்டுபண்ணுகின்ற; வெவ்விடம் ஒழிப்பதுமாம் - கொடிய விஷத்தைப் போக்குவதுமாகிய; குளிர் சுதா சிந்துவாம் உன்னை - குளிர்ந்த அமிர்தநதியாகிய தேவரீரை! பொன்னையேய் புனிதர் - பொன்னைப்போலப் போற்றத்தக்க சாதுக்கள்; படிந்து - வணங்கி; (மூழ்கி;) மும்மைவெம்மை - தாபத்திரயங்களையும் வல் விரைவில் - அதிசீக்கிரத்தில்; போக்குகின்றனர் - ஒழித்துவிடுகின்றனர் எ-று.

கருத்து:—சாதுக்கள் துர்க்கதியாகிய கொடுவிடத்திற் கமுதநதியாகிய நாய்ச்சியாரை யடிபணிந்து தாபத்திரயங்களையும் அதிசீக்கிரமாகப் போக்குகிறார்களென்பது.

விசேடக்குறிப்பு:—அரங்கம் மா மாகத்து எனப் பதம்பிரித்து, அரங்கமாகிய பெருமைபெற்ற ஆகாயத்திலென்றும், அரங்கம் ஆம் மாகத்து என்று பிரித்து அரங்கமாகிய ஆகாயத்திலென்றும் பொருள்கூறலாம். இங்கு அரங்கமென்றது சமரபூபாலனென்னும் திவ்யசிம்மாசனத்தோடுகூடிவிளங்கும் அர்த்தமண்டபத்தை. திருவரங்கமாநகரமன்று. இது வாசஸ்தானத்தைக் குறிக்குமென்பதை, "திருஅரங்காவுறைமார்பா" என்னும் திவ்வியகவிவாக்கானும் உணர்க. கோயிலுக்குப் பூலோகவைகுண்டமென்றுந் திருநாமமுண்மையால் திருவரங்கமாநகரமாகிய பரமாகாசத்தி லென்று பொருள் கூறலாமாயினும் இங்குப் பொருந்தாதாம். அரங்கு என்பது அம்முச்சாரியை பெற்று அரங்கமெனவந்தது. அவிர்திரு, அமர்மால்—வினைத்தொகைகள்.

அமர்ந்திருத்தல் முக்காலத்திலு மொத்தியல்வதாதலின் நிகழ்காலமாக வடநூலார்கொள்கைப்படி பொருள்கொள்ளப்பட்டது. அவிரென்பதுக்கும் இவ்வாறே கொள்க. தென் - கருமை. மால் என்பது எம்பெருமானுக்கும் மேகத்துக்கும் பெயர். கொன் - அச்சம். ஏ பிரிநிலை. சுதா - அமுதம். சிந்து - நதி. பொன்னேயேய்தலாவது - பொன்னென்பது உலோகங்களுக்கெல்லாம் மேலான பெருமைபெற்றுவிளங்குவதுபோல அடியார்களுக்கெல்லாம் மேலாய்விளங்குதல். பொன் என்பது இங்குச் சுவர்ணத்தைக் குறிக்கின்றது. பொன்போலப் புனிதர் போற்றத்தக்கவரென்பது கருத்து. புனிதர் என்றது சாதுக்களை; அவர்களே மனம் மொழி மெய்களிற் பரிசுத்தமுடையவராதலின். படிதல் - வணங்கல்; மூழ்கலுமாம். மும்மைவெம்மையாவது—தன்னால்வருவது, தெய்வத்தால் வருவது, புலிமுதலிய துட்டஜந்துக்களால் வருவது. இவை முன்னமே விளக்கப்பட்டன.

இதுவும் இருபத்தைந்தாவதுபாட்டைப்போன்றிருத்தலிற் சமநிலையேயாம்.

அணி:—அன்னையே மன்னு, மும்மை வெம்மை—வழியெதுகை யென்னுஞ் சொல்லணி. அரங்கம், திரு, மால், கருணை, நரகு, நாய்ச்சியார் என்னும் உபமேயங்களிலே முறையே ஆகாயம், மின்னல், மேகம், மழை, விடம், சுதாநதி யென்னும் உபமானங்களை ஒற்றுமையினு லாரோபித்திருத்தலில், இப்பாட்டு அவையிலொற்றுமையுருவகமாம். மிகையும் குறையும் உபமானுபமேயங்களில் இல்லாமையாலே அவையில் என்று விசேடிக்கப்பட்டது. ஒற்றுமையென்று விசேடித்தது அவற்றின் செய்கையாலு முருவகப்படுத்தலுண்மையின். "ஒற்றுமை செய்கை யொன்றுற் புனைவுளி, தன்னிலல் பொருளைத் தாக்குத லுருவகம்" (புனைவுளி - உபமேயம். அல்பொருள் - உபமானம்.) என்பர் சந்திராலோகநூலார். வடநூலார் இதனை அபேதரூபகமென்றும், செய்கையால் வருவதைத் தாத்ரூப்பிய ரூபகமென்றும் சொல்வர். மிகை, குறை யென்பதை முறையே அதிகம் நியூநமென்ப. "உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித், தொன்றென மாட்டினஃ துருவகமாகும்" என்பர் தண்டியாசிரியர். பொருள் - உபமேயம். ஒன்றென மாட்டுதல் - ஆரோபித்தல்; அதாவது—உபமானுபமேயங்களின் அபேதவுணர்ச்சி. இந்த அணியை வித்யாநாதர்முதலியோர் சமஸ்தவஸ்துவிஷய சாவயவ ரூபகாலங்காரமென்பர். (உசூ)

27. குற்றமுற் றவுஞ்செய் குற்றவென் றனையுங்
குளிரளி யினுக்கிலக் காக்கிச்
செற்றமுற் றிடாம லளித்தரு டலைநீ
செய்தவ ளாகினை யானல்
நற்றவர் பற்றே நிற்கிது தகுமால்
நனி தவக் கடிபடு நகிலை
யுற்றவ ளாயும் பெற்றதாய் சுதனை
யுவந்தமு தூட்டியே வளர்க்கும்.

பதவுரை:—நற்றவர்பற்றே - நலந்தருவதான தவத்தினையுடைய பெரியோர்களுக்கெல்லாம் தஞ்சமாக விருப்பவரே!; நீ - தேவரீர்; குற்றம் முற்றவும் செய்குற்ற என்றனையும் - எத்தனைவிதமான அபராதங்களுள்ளனவோ அவையனைத்தையும் செய்திருக்கிறவனான அடியேனையும்; செற்றம் உற்றிடாமல் - கோபங்கொள்ளாமல்; குளிர் அளியினுக்கு இலக்கு ஆக்கி - தண்ணளிக்குப் பாத்திரனாகப்பண்ணி; அளித்து அருடலை - ரட்சித்தருளுதலை ; செய்தவள் ஆகினையானல் - செய்தருளியவராக ஆவீரேயானல்; இது - இந்த ரட்சணகாரியம்; நினக்கு - சகலலோக ஜநநியாகிய தேவரீருக்கு ; தகும் - உசிதமாம்; பெற்றதாய் - வருந்திப் பெற்றுவளர்த்த தாயானவள்; நனி தவக் கடிபடுநகிலினள் ஆயும் - பெற்ற குழந்தையினாலே மிகவும் அதிகமாகக் கடிபட்ட தனதடங்களையுடையவளாயிருந்தாலும்; சுதனை - தன்குழந்தையை; உவந்து - அதனல் வெறுப்புறாமல் பிரீதியோடு எடுத்து மார்பிலணைத்து மகிழ்ந்து; அமுதூட்டி - முலைப்பாலையருத்தி; வளர்க்கும் - காப்பாற்றுவாள் எ-று. ஆல் அசை.

கருத்து:—அகிலலோக ஜநநியாகிய தேவரீருக்கு அதிபாதகாதி பாதகங்களையெல்லாஞ் செய்துள்ள வென்னையும் கருணைக்கிலக்காக்கிக் காப்பாற்றுதல் கடமையேயாமென்பது.

விசேடக்குறிப்பு:—பற்று - தஞ்சம்; இதனைப் பற்றுக்கோடென்பர். நற்றவர் - பிரபந்நர்; இப்பாட்டிலுள்ள மூன்றும்மைகளில் முன்னது முற்றும்மை; இடையது இழிவுசிறப்பும்மை; கடையது உயர்வுசிறப்பும்மை. செய்குற்ற — செய் பகுதி; உறு துணைவினைப்பகுதி; கு - சாரியை; உகரக்கேடு சந்தி. செய்குறு — அனைத்தும் ஒரு பகுதி; பகுதி யிரட்டி யிறந்தகாலங்காட்டிற்று. அ பெயரெச்சவிகுதி; ஆதலால் இது செய்த என்னும் வாய்பாட்டு இறந்தகாலப் பெயரெச்சம்; என்னையென்னும் பெயரைக்கொண்டு முடிந்தது.

குணம்—செறிவு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1936-ஆம்ஹூ பிப்ரவரிமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1936 பிப்ரவரி			வரவு 1935 பிப்ரவரி		
I General Section:						
(1) சங்கம் லைப்ரரிக்காக 1935-1936ம் வருஷத்துக்கு சாங்கிஷன்செய்யப்பெற்ற contribution மதுரை முனிசிபாலிடியிலிருந்து வரவு ...	300	...	...			
(2) மாதச்சந்தா வகையில் வரவு ...	70	...	...			
(3) சங்கக்காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ...	30	...	...			

விவரம்	செலவு 1936 பிப்ரவரி			செலவு 1935 பிப்ரவரி		
I General Section:						
(1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	125	8	...			
(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	140	...	...			
(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ...	112	1	6			
(4) Stationery contingencies வகையிற்செலவு ...	3	1	3			
5) சங்கக்கலாசாலை உபயோகத்துக்குப் புத்தகம்வாங்கியவகையிற் செலவு ...	...	14	...			
(6) ஆபீஸிற்கு Furniture வாங்கிய வகையிற் செலவு ...	1	...	...			

(4) **Miscellaneous வரவு** ...	5	12	...			
மொத்தம் ரூ ...	405	12	...	464	2	4
II Editorial Section:						
(1) செந்தமிழ்ப்பத்திரிகைக்குச் சந்தாவகையில் வரவு ...	14	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	20	2	6			
(3) செந்தமிழ்ப் பழையபிரதிகள் விற்றவகையில் வரவு. ...	93	9	9			
மொத்தம் ரூ ...	127	12	3	77	2	...

(7) தபால். தந்திவகையிற்செலவு	9	8	...			
(8) முனிசிபல் லாண்டு ரெவினியூ செல்லாக்கியது ...	62	...	...			
(9) சங்கமாபீசு சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி வகையிற் செலவு ...	30	...	...			
(10) சங்கப்பரீக்ஷைகள்சம்பந்தமாகச் செலவு ...	103	6	9			
(11) Miscellaneous செலவு ...	1	...	...			
மொத்தம் ரூ ...	588	7	6	552	2	1
II Editorial Section:						
(1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	85	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கன்டின்ஜன்ஸி வகையிற் செலவு ...	3	1				
(3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு ...	74	...	...			
(4) தபால், தந்திவகையிற் செலவு. ...	8	...	...			
மொத்தம் ரூ ...	170	1	..	215	10	8

III Press Section:						
(1) அச்சுக்கூலிவகையில் வரவு.	101	...	...			
(2) பைண்டிங்கூலிவகையில் வரவு ...	3	...	...			
மொத்தம் ரூ ...	104	...	...	90	...	...

III Press Section:						
(1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	46	3	10			
(2) ஷை ஆபீஸிற்கு அச்செழுத்துக்கள் வார்த்தவகையிற் செலவு...	1	...	...			
(3) ஷை ஆபீஸ் **Stationery contingencies** வகையிற் செலவு.	6	...	3			
(4) அச்சாபீஸ் சிறு டிரெடில் மெஷின் ரிபேர் வகையிற் செலவு.	45	...	...			
மொத்தம் ரூ. ...	98	4	1	225	7	9

ஆகமொத்தம் வரவு ரூ ...	637	8	3	631	4	4	ஆக மொத்தம் செலவு ரூ ...	856	12	7	993	4	6
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ ...	807	14	6	4703	13	4	மாத முடிவில் மீதி இருப்பு ரூ ... *	588	10	2	4341	13	2
ஆகமொத்தம் ரூ ...	1445	6	9	5335	1	8	ஆகமொத்தம் ரூ ...	1445	6	9	5335	1	8

*By M. R. C. C. Bank
Pass Book Rs. 350- 0- 0
Cash on hand Rs. 238-10- 2

588-10- 2

குறிப்பு:—மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 588-10-2 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரூ. 25011-5-0; (2) ரூ. 1050-0-0; மதுரையிலுள்ள இந்தியன்பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரூ. 10000; (2) ரூ. 10000; (3) ரூ. 5000; காரைக்குடி மகா-ள-ள-ஸ்ரீ அ. சுப. சாம. நாராயணன்செட்டியாரவர்களின் ரெங்கூன் அய்மேன்கடையில் வட்டிக்குச் சேர்க்கப்பட்டுள்ள முதலனம் ரூ. 1200 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 2–3–'36.

LAKSHMINARAYANAN,
MANAGER, 2–3–'36.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1936-ஆம் வருஷம் மார்ச்சுமாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1936 மார்ச்சு	வரவு 1935 மார்ச்சு	விவரம்	செலவு 1936 மார்ச்சு	செலவு 1935 மார்ச்சு
I GENERAL SECTION :			I GENERAL SECTION :		
			(1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	73 8 ...	
			(2) Stationery, contingencies வகையிற் செலவு ...	2 15 6	
(1) மாதச்சந்தாவகையில் வரவு...	80				
			(3) பாண்டியன் புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தா செல்லாக்கியது. ...	5	
			(4) Furniture வகையிற் செலவு	... 5 ...	
(2) சங்கக் காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ...	30		(5) தபால், தந்தி வகையிற்செலவு	6 8 ...	

(3) **Miscellaneous** வரவு ...	5	12	...			
மொத்தம் ரூ ...	115	12	...	92	5	3
II EDITORIAL SECTION :						
(1) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	57	9	...			
மொத்தம் ரூ ...	57	9	...	161	7	...

(6) சங்கமாபீசு சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலிவகையிற் செலவு...	60	...	...			
(7) சங்கப்பரீக்ஷைசம்பந்தமாகச் செலவு ...	47	8	3			
மொத்தம் ரூ	195	12	9	627	7	10
II EDITORIAL SECTION:						
(1) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும்சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸிவகையிற் செலவு. ...	35	4	10			
(2) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு.	96	...	...			
(3) தபால் தந்திவகையிற் செலவு	9	...	6			
மொத்தம் ரூ ...	140	5	4	170	8	3

III PRESS SECTION :						
1) அச்சுக்கூலி வகையில் வரவு	129	8	...			
2) பைண்டிங்கூலி வகையில் வரவு ...	28	...	...			
மொத்தம் ரூ ...	157	8	...	130	8	...

III PRESS SECTION :						
(1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	47	10	3			
(2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு.	12	7	3			
மொத்தம் ரூ ...	60	1	6	142	13	9

ஆகமொத்தம் வரவு ரூ. ...	330	13	...	384	4	3	ஆக மொத்தம் செலவு ரூ.		396	3	7	940	13	10
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ. ...	588	10	2	4341	13	2	மாதமுடிவில் மீதியிருப்பு ரூ. ...	* 523	3	7	3785	3	7
ஆகமொத்தம் ரூ. ...	919	7	2	4726	1	5	ஆக மொத்தம் ரூ. ...	919	7	2	4726	1	5

*By M. R. C. C. Bank
Pass Bk. Rs. 350- 0- 0

Cash on hand Rs. 173- 3- 7

523- 3- 7

குறிப்பு:—மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 523—3—7 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 25011—5—0. (2) ரூ. 1050—0—0; மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 10000. (2) ரூ. 10000. (3) ரூ. 5000. காரைக்குடி மகா-ள-ள-ஸ்ரீ கா. அப. ராம. நாராயணன்செட்டியாரவர்களின் ரெங்கூன் அட்மேன் கடையில் வட்டிக்குச் சேர்க்கப்பட்டுள்ள மூலதனம் ரூ. 1200 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 3—4—'36.

LAKSHMINARAYANAN,
MANAGER, 2—4—'36.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது உரையுடன்	0	4	0
2.	கணுநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்)	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	யாண்டியம்	0	4	0
32.	மநீஷாபஞ்சகம	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	அகப்பொருள்விளக்கம்	1	4	0
35.	*திருமந்திர நூறுபாட்டுக்குரை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையஉரையும்(முதல் 100 செய்)	1	0	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...		0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு		0	6	0
42.	அகராதிநிகண்டு		0	12	0
43.	மேகவிடுதூது		0	2	0
44.	திருக்குற்றாலமாலை		0	2	0
45.	தண்டலையார்சதகம்		0	4	0
46.	இராமே[illegible]		0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்		0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்		0	6	0
50.	தமிழரும் ஆந்திரரும்		0	4	0
51.	மதங்கசூளாமணி		1	0	0
52.	கூடற்புராணம்		0	10	0
53.	திருவள்ளுவர்		0	6	0
	ஷை ஆங்கிலத்தில்		0	6	0
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு ...		1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...		0	12	0
56.	பாப்பாவினம்		0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை		0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்		0	3	0
59.	கடம்பர்கோயில் உலா		0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி		0	6	0
61.	கலைசைக்கோவை		0	12	0
62.	பெருந்தொகை		5	0	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணு 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ. 4—8—0. இதுவரை 32 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. ப. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணு வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.